

"டெடிகமைக்கு இடைத்தேர்தல் காங்கேசன் துறைக்கு இழுத்தடிப்பு..!


# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, ஆனி 3உ (17—6—73) ஞாயிறு ஐ:அவ் 15—புத்தகம் 26 இதழ் 27


# தமிழருக்கு எதிரான கொடூரே பாரபட்சம்!"

"கடந்த 1973 ஏப்ரலில் திரு. டட்லி சேனநாயகா மரணமடைந்ததால் டெடிகமைத்தொகுதியில் ஏற்பட்ட காலி இடத்துக்கு அடுத்த மாதம் இடைத்தேர்தலை நடத்த விருக்கிறது அரசாங்கம். இதை வரவேற்கிறோம். ஆனால் அதே நேரத்தில் கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாகியும் தந்தை செல்வா அவர்கள் பதவி விலகியதால் காங்கேசன் துறையில் ஏற்பட்ட காலிஸ்தானத்துக்கு இதுவரை தேர்தலை நடத்தாமல்—நொண்டிக் காரணங்களைக் காட்டி அரசு ஒத்திவைத்து வருகிறது. தங்கள் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் அடிப்படை சனநாயக உரிமைகளைத்தானும் தமிழ் மக்கள் அனுபவிக்கவிடாமல் இந்த அரசாங்கம் தடுக்கிறது பறிக்கிறது என்பதற்கு காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடத்தாதது தக்க சான்ருகும்.

இடைத்தேர்தல் நடத்துவதில் கூட தமிழ்ப் பகுதி, சிங்களப்பகுதியென்றும், தமிழன், சிங்களவன் என்றும் இந்த அரசாங்கம் கொடூரபாரபட்சக் கண்கொண்டு நோக்குகிறது என்பதை டெடிகமைத்தேர்தல் உடனடியாக நடப்பதும்—காங்கேசன்துறை இடைத்தேர்தல் தக்ககாரணமின்றிப் பின்போடப்படுவதும் தக்க உதாரணமாகும்."

—இவ்வாறு தமிழர் கூட்டணி செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் சுதந்திரன் நிருபருக்கு அளித்த பேட்டியொன்றில் விளக்கிக்கூறியுள்ளார்.

## தமிழா சிந்தியடா சிந்தி!

தமிழினத்தின் உரிமைக்கோரிக்கையை முன்வைத்து—அரசாங்கத்துக்கு சவால் விடுத்து—தமது காங்கேசன்துறை பா. உ. பதவியை தமிழர் தந்தை செல்வா துறந்தது 1972ம் ஆண்டு அக்டோபர் 3ல்!

இன்றைய அரசு சனநாயக அரசாக இருந்திடின்—செல்வாவின் பதவி துறப்பால் ஏற்பட்ட காலி இடத்துக்கான இடைத்தேர்தலை, அவர் பதவி துறந்து மூன்று மாதங்களுக்குள் நடத்தியிருக்க வேண்டும்!

ஆனால் மாதங்கள் எட்டு மறைந்து விட்டன. நொண்டிச் சாட்டுக்களைக்கூறி—காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடத்தாமலே சர்வாதிகார முறையில் தட்டிக்கழித்துவருகிறது அரசு!

அதே வேளையில்—கடந்த 1973 ஏப்ரலில் திரு. டட்லி சேனநாயகா காலமானதால் காலியான டெடிகமைத் தொகுதிக்கான இடைத்தேர்தலை இரண்டு மாதங்களில் நடத்துகிறது அரசு!

இது ஏன்? ஏன்? தமிழா சிந்தித்துப்பார்!

'டெடிகமை' சிங்களப்பிரதேசத்தில் உள்ள ஒரு தொகுதி...! எனவே அங்கு மட்டும் உடனே இடைத்தேர்தல்! டெடிகமைத்தொகுதியில்வாழும் சிங்கள மக்கள் பிரதிநிதித்துவம் இல்லாமலிருக்கக் கூடாதென்பதில் அரசுக்கு அவ்வளவு அக்கறை!

'காங்கேசன்துறைத்தொகுதி' இருப்பதோ தமிழ் பகுதியில்! அங்கு இடைத்தேர்தல் நடைபெருததால் பாதிக்கப்படுவதோ தமிழ் மக்கள் தானே! எனவே அதில் என்ன அக்கறை இருக்க முடியும் சிங்கள ஆட்சியாளர்களுக்கு!

இடைத்தேர்தலை நடத்துவதில் கூட சிங்கள நாட்டுக்கு ஒருநீதி—தமிழ் இலங்கைக்கு இன்னொர் நீதி! இவர்களுடன் சேர்ந்துவாழ வேண்டுமென்று நமக்கென்ன விதி?

தமிழா! சிந்தியடா சிந்தி!

# தமிழர் கூட்டணியை தடைசெய்ய திரைமறைவுச் சதி?

தமிழினத்தின்சுதந்திரத்துக்கும் உரிமைகளுக்கும் போராடி வரும் தமிழ் மக்களின்தேசியகூட்டமைப்பான தமிழர் கூட்டணியை தடைசெய்வதற்கு திரைமறைவில் திட்டமிட்ட சூழ்ச்சியொன்று நடைபெற்று வருவதாக கூறப்படுகிறது.

தமிழ் ஈழத்தில் வன்முறைகள் நடப்பதாகவும் இந்த வன்முறைகளை தமிழர் கூட்டணியே பின்னிருந்து இயக்கிவருவதாகவும் திட்டமிட்ட பொய்ப்பிரச்சாரத்தை சில காலத்துக்கு தொடர்ந்து நடத்தி வந்து, இறுதியில் இதையே காரணமாகக் காட்டி தமிழர் கூட்டணியை தடைசெய்ய வேண்டுமென்பதே இச் சூழ்ச்சித்திட்டமாகும்.

- தமிழர் கூட்டணிக்கும் வன்முறைச் சம்பவங்களுக்கும் தொடர்பு இருப்பதாக பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் அடிக்கடி கூறி வருவது.
- ஏதாவது வன்முறைச் சம்பவங்களை யொட்டி கைது செய்யப்படும் சந்தேக நபர்களையெல்லாம் தமிழர் கூட்டணியைச்சேர்ந்தவர்கள் என்று பிரசாரம் செய்வது.

(7-ம் பக்கம் பார்க்க)

## நிலைமை மோசமடையுமுன்

# இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா தலையிட்டாக வேண்டும்

—இந்தியன் எக்ஸ்பிரஸ்

'தமிழர்கள் தங்களுக்கு பாரபட்சம் விளைவிப்பது என்று கருதுகின்ற இலங்கையின் புதிய அரசியல் சட்டத்துக்கு எதிராக கிளர்ச்சி செய்து வருகிருர்கள். புதிய அரசியல் சட்டத்தை உருவாக்குவதில் அவர்கள் மிகச் சிறிய அளவில் மட்டுமே பங்கு பற்றினுர்கள். அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு அவர்கள் கொண்டு வந்த திருத்தங்கள் புறக்கணிக்கப்பட்டன. தாங்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக்கப்பட்டு விட்டதாக அவர்கள் உணருகிருர்கள்.

'பிரச்சினைகள் மோசமான நிலையை அடைய முன்னர், இலங்கையில் தோன்றியுள்ள சிக்கலில் தலையிடுவதற்கு இந்தியா தவறிவிடக்கூடாது. சிங்களவர்கள் மத்தியில், இந்தியா தமிழர்களின் பக்கம் இருப்பதாக சந்தேகம் இருக்கிறது. மறுபக்கத்தில், சிங்களவருடன் நட்பாக இருப்பதற்காக இந்தியா தங்கள் உரிமையைப் பறிப்பதற்கு உடந்தையாக இருப்பதாக தமிழர்கள் கருதுகிருர்கள்.

'தோன்றியுள்ள நெருக்கடி நிலையில், தமிழர்கள் சுயமரியாதையுள்ள மக்களாக இலங்கைக் குடியரசில் வாழ்வதற்கு இலங்கை தேவையான வழிவகைகளை காணும் என்று இந்தியா எதிர்பார்க்கின்றது'

—இவ்வாறு 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏடு மே 22ம் திகதி தீட்டியுள்ள தலையங்கம் ஒன்றில் கூறியுள்ளது

# பழம்பெரும் தமிழரசுத் தொண்டர் காலமானுர்

## வவனியா பா. உ. இறுதி அஞ்சலி!

முள்ளியவளை கிராம சபைத்தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவரும், வவுனியா மாவட்டத்தில் பிரபல கட்சித் தொண்டராகவும், சிறந்த சமூக சேவையாளராகவும் விளங்கிய திரு. முத்தர் அரியகுட்டி அவர்கள் தனது 52வது வயதில் 7-6-73 வியாழக்கிழமை முள்ளியவளையில் காலமானுர்.

சிறந்த தமிழ்ப்பற்றும், இன உணர்ச்சியும் மிக்கவராக விளங்கிய திரு. அரியகுட்டி, வவுனியா மாவட்டத்தில் தமிழரசுக் கட்சியின் வளர்ச்சிக்காக துணிச்சலுடன் முன்னின்றுழைத்தவர்.

1961ம் ஆண்டு வவுனியாவில் நடந்த சத்தியாக்கிரகத்திலே யெல்லாம் நேரடியாகவே பங்குகொண்டு இளைஞர்களை யெல்லாம் ஒன்று சேர்த்துத் தனது துணிச்சலை வெளிக்காட்டியவர்.

(7-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



க. ஜெயன்
மாதகல்

கே: காசிஆனந்தனின் திறமைக்கு தமிழர்களாகிய நாம் என்ன கைமாறுசெய்ய வேண்டும்?

ப: தமிழ்த்தாயின் அடிமை விலங்கை அறுக்கப்போராட வேண்டும்!

கே:— தமிழர் கூட்டணியின், அடுத்த முயற்சிஎன்ன?

ப: தமிழ் ஈழத்தில் தமிழர் சுயாட்சியை நிலைநாட்டுவது!

கே:— உரிமை கேட்கும் தமிழனை அடித்து விரட்டும் மனித ஜென்மங்களை எதற்கு ஒப்பிடலாம்?

ப: சிங்கத்தின் வழித்தோன்றல்களுக்கு மிருக குணம் இருக்குமேதவிர மனிதப்பண்பாடு எப்படி இருக்க முடியும்.

ஃ

ஏ. கே. ரஸாக்,
கொழும்பு-14

கே: ஒரு எழுத்தாளனுக்கு முக்கியமாக இருக்கவேண்டியது யாது?

ப: தனக்கு நியாயம் என்று பட்டதை அஞ்சாமல் எடுத்துரைக்கும் துணிவு!

ஃ

கெ. என். மகேந்திரலிங்கம்
சங்கானை

கே: தமிழர் கூட்டணியின் முக்கிய கொள்கை என்ன?

ப:— தமிழ் ஈழத்தில் தமிழர் சுயாட்சியை நிலைநாட்டுவது!

கே:— மூதூர் இரண்டாவது தேசிய அரச பேரவை உறுப்பினர் அ. தங்கத்துரை பற்றி சில வரிகள்......

ப:— இளைஞர்; விடுதலை உணர்வு கொண்டவர்; எதிர்காலத்தில் கிழக்கின் தளபதியாக வரக்கூடியவர்: அப்படிப்பட்ட தங்கத்துரை ஏன் சுறுசுறுப்பாக இயங்காமலிருக்கிறார் என்பதுதான் எனக்கு புரியவில்லை.

ஃ

நாக. பத்மநாதன்
இசங்கன்குளம்
அடம்பன்
மன்னார்.

கே:— மூன்றரைக் கோடி ரூபா செலவில் கொழும்பு மாநகரில் கட்டி எழுப்பப்பட்ட ஞாபகார்த்த மண்டபத்தின் திறப்பு விழா வைபவத்தையும் இது சம்பந்தமானபேச்சுக்களையும் பத்திரிகைச் செய்திகளையும் கவனிக்கும் போது இது பண்டாரநாயக்கஞாபகார்த்தமண்டபமா அல்லது சீன ஞாபகார்த்த மண்டபமா என்பது விளங்கவில்லையே!

ப: உங்கள் ஐயம் எனக்குமுண்டு—விரைவில் இது சீன ஞாபகார்த்த மண்டபமாக மாறினாலும் ஆச்சரியமில்லைத்தான்!

ஃ

இராமலிங்கம் கந்தசாமி
கைதடிவடக்கு
கைதடி

கே: காங்கேசன்துறை இடைத்தேர்தலில் அரசின் சார்பில் பிரசாரம் செய்வதற்கு வி. பி: அண்ணா தி.மு.கத் தலைவர் எம். ஜி. ஆரை அழைக்கப்போவதாக கூறுகின்றார் இதைப்பற்றிய தங்கள் கருத்து என்ன.

ப: அண்ணா தி. மு. கழகத் தலைவர் எம். ஜி. ஆர். வி. பி. அழைத்தவுடன் இங்கு வருவதற்கு கடைச் சரக்கல்ல; எம். ஜி. ஆர் அவர்களுக்கு ஈழத்தமிழர்களின் உணர்ச்சிகள் நன்கு புரியும். பெரியவர் தந்தை செல்வாவுக்கு எதிராக தன்னைப் பயன்படுத்துவதற்கு மக்கள் திலகம் ஒருபோதும் இடமளிக்கமாட்டார்!

ஃ

நா: விசாகலிங்கம்
கண்டிரோட்
கைதடி

கே: பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தை சீனா கட்டி அன்பளிப்பாக இலங்கைக்கு கொடுத்ததின் நோக்கம் என்ன?

ப: நக்குண்டார் நாவிழந்தார் என்பது சீனர்களுக்கு தெரியும்!

ஃ

சி. இராசநாயகம்
யாழ்ப்பாணம்

கே: திண்டுக்கல் இடைத்தேர்தல் முடிவின் பிரதிபலிப்பாக தி. மு. க. அமைச்சரவை பதவி விலகவேண்டுமென்ற கருத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

ப: ஒரு நாளும் ஆதரிக்க மாட்டேன். திண்டுக்கல் தீர்ப்பின் வெளிச்சத்தில் தி.மு. கழக ஆட்சி தன்மீது ஏதாவது தவறுகள் இருந்தால் அவற்றைத் திருத்திக் கொள்ளவேண்டுமென்பது தான் நமது கருத்தேயொழிய தி. மு. கழ ஆட்சி பதவி துறக்கவேண்டுமென்ற கருத்தினை தமிழின உணர்வுள்ள எந்த ஒரு தமிழனும் ஆதரிக்க மாட்டான்!

கே: எம். ஜி. ஆர். பற்றி இப்போது என்ன கூறுகிறீர்கள்?

ப: மக்கள் மத்தியில் அவருக்குள்ள தனிச்செல்வாக்குக்கு தலைவணங்குகிறேன். ஆனால் மக்கள் திலகத்தை சுற்றியுள்ள கம்யூனிஸ்ட் சுரடிகள், மக்கள் திலகத்தை விழுங்கிவிடக் கூடாதே என்பதுதான் எனது கவலை!

ஃ

ஆ. ஜெயம்
மாரீசன் கூடல்

கே: திருவாளர் மா. பொ. சி அவர்களின் முகவரியை அறிவிப்பீர்களா?

ப: 1-29, இருசப்ப கிராமணித் தெரு, சென்னை-5 தமிழ் நாடு—

கே: முதல்வர் கருணாநிதியின் புதல்வர் திடீர் எனக் கலப்புத் திருமணம் செய்ததன் காரணம் என்ன?

ப: திடீர் திருமணமல்ல அது—பெற்றோர் பேசிச் செய்த திருமணம்தான்!

து. கரன், கம்மடுவ.

கே: உரிமை, உரிமை என்று நாம் ஓயாமல் குரல் கொடுத்துக்கொண்டிருக்கின்றோம் ஆனால் இவ்வரசாங்கம் நமது உரிமைகளை தருவதற்கு தயங்குவதன் காரணமென்ன?

ப: மயிலே மயிலே என்றால் மயில் இறகு போடாது. இனி மயிலைப் பிடித்து இறகைப் பிடுங்கியெடுக்கவேண்டியதுதான்.

ஃ

பா. வனஜா, கல்லடி.

கே: திண்டுக்கல் தேர்தல் முடிவு பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: 'அண்ணா' எனும் பெயருக்கு தமிழ் நாட்டில் இருக்கும் செல்வாக்குக்கு ஓர் எடுத்துக்காட்டு!

ஃ

அம்பை சி. தர்மநாதன்,
உருத்திரபுரம், கிளிநொச்சி.

கே: தனிநாடு தமிழர்க்குக் கிடைக்கும்பட்சத்தில் சிறுபான்மைத் தமிழர் மீது பெரும்பான்மைத் தமிழர் சாதித்துவேசம் காட்டிப் புறக்கணிப்பார்கள் என்று சிலர் பயம்கொள்கிறார்கள். இதற்குத் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: தமிழ் மக்களுக்கென்று தனியரசொன்று உருவாகுமானால், அங்கு சாதி, மத பேதங்களுக்கு துளியும் இடமிருக்காது. சாதி பேதம் ஒழிக்கப்படுவதுமட்டுமல்ல-சாதியேஒழிக்கப்பட்டுவிட்ட சமதர்ம பூமியாக புதிய தமிழகம்திகழும்! சிறுபான்மை, பெரும்பான்மை என்று தமிழர்களுக்கிடையே பேதம் எதுவுமே இருக்காது!

# இளைஞர் பேரவை கிழக்கிலும் முகிழ்த்தது!

தமிழ் இளைஞர் பேரவை, மீன்பாடும் தேனாடாம் மானத்தமிழ் மறவர் வாழும் மட்டுமாநகரிலும் அண்மையில்தொடங்கப்பட்டுள்ளது. இந்தப் பேரவையின் தலைவராக ஏறாவூர் தெற்கு கி. ச. தலைவர் திரு. எஸ். ஆலாலசுந்தரம் தெரிவுசெய்யப்பட்டார்.

இளைஞர் பேரவையின் தொடக்கவிழாவில் கலந்துகொண்டு நாவலர் அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

'மட்டக்களப்புப் பகுதியில் தமிழர் கூட்டணி நடவடிக்கைகளில் கரிசனை காட்டப்படுவதில்லைஎன்றுபொதுவாகக் குறை சொல்லப்படுகிறது. இந்தக் குறையைப் பெரும்பாலும் மட்டக்களப்பு இளைஞர்களே கூறி வருகின்றனர். இவர்களது ஆர்வத்துக்கும் இன, மத, மொழி, கலாசாரப் பற்றுக்கும் ஈடுகொடுக்கும் வகையில் இந்த இளைஞர் பேரவை அமைக்கப்படுகிறது. மட்டக்களப்பு இளைஞர்களின் இன ஆர்வத்தையும், உரிமைப் போராட்டத் துடிப்பையும் இந்தப் பேரவை தக்கவாறு பயன்படுத்த வேண்டும்.

'எந்தக் கட்டத்திலும் உணர்ச்சிவயப்பட்டு பாதை தவறிவிடக்கூடாது. அறிஞர் அண்ணா கூறிய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தைக்கடைப்பிடித்தும், அண்ணல் காந்திஜி காட்டிய அகிம்சை வழியில் நடந்தும் நமது இனத்தின் விடுதலைகாண இளைஞர்கள் தங்களாலான பணிகளைச் செய்ய வேண்டும்.'

# தவறாய் எழுதுகிறான்!

— தாமரைத்தீவான் —

ஈழத்தில் மட்டுமல்ல; எங்கும் தமிழன் இனி
வாழவே மாட்டான் ஆம் வாழ்ந்தால் அது வியப்பே!
ஆளப்படுபவனாய் அடிமை விலங்காகி
மாளத்தான் எண்ணுகிறான் மாண்டாலும் நல்லதுதான்!

நாளை நினைப்பின்றி நடப்பதனைக் கண்டவுடன்
வேலை அதையே தன் வெறுப்பின் முடிவாக்கி
ஆளை அறியாமல் அணிமாறிப் போகின்றான்!
தாளில் வரலாற்றைத் தவறாய் எழுதுகிறான்!

நீதி விளங்காமல் நெறியாகப் போகாமல்
ஆதி முதலான அருந்தமிழைப் பாராமல்
பாதியிலே வந்து மிகப் பாழ் படுத்திக்கொண்டிருக்கும்
சாதியினைக்கொண்டலவோ தகுதி கணிக்கின்றான்!

காட்டிக்கொடுக்கின்றான்! காசு தராவிட்டால்
போட்டிக்குப் போகின்றான்! பொறாமை மிகுதியினால்
ஆட்டி அலைக்கின்றான்! அறிவார்ந்த சான்றோரை
வாட்டி வதைக்கின்றான்! வம்பு தும்பாய் ஏசுகிறான்!

படித்தும் அறிவின்றிப் பரந்தபெரும் நோக்கின்றி
குடித்து வெறிகொண்டு குழப்பங்கள் செய்கின்றான்!
அடித்துச் சுருட்டுகிறான் அகப்பட்டதை எல்லாம்!
நடித்து உலகிற்கோ நல்லவனாய்க் காட்டுகிறான்!

நன்றி, தியாகம், நாட்டின் பணி, நட்பு
ஒன்றும் புரியாமல் உண்மை விளங்காமல்
அன்று நிகழ்ந்திட்ட அரிய சரிதமெலாம்
இன்று மறந்து விட்டு ஏதேதோ செய்கின்றான்!

இவனா மறத்தமிழன்? இவனா தமிழ் காத்தோன்?
இவனா அறிவாளி? இவனா அரசாண்டோன்?
இவனுக்கேன் தாய்நாடு? இவனுக்கேன் நல்ல தமிழ்?
இவனுக்கேன் நல்லகலை? இவனுக்கேன் நல்லரசு?

பார்க்க மினிச்சினிமா! பசிக்குச் சுவைத் தீனி!
வேர்க்காமல் செய்ய ஒரு வேலை! பணம்—வீடு!
ஊர்க்குள் திரிந்து உலாவ மினி மங்கை!
தீர்க்கும் தமிழனது தேவை இவை மட்டே!

# உயர்வின் கரு

— ஆ. சேயோன், பண்ணாகம் —

தமிழுக்கு இங்கே இடமில்லை என்றால்
தரணியை மாய்த்திடுவோம் — உயர்
அமிழ்தினு மினியநம் தமிழ்மொழி வாழ்ந்திட
அரியநம் உயிர்கொடுப்போம்.

செந்தமிழேயெம்முள் சேர்ந்திடும் மூச்செனும்
செம்மைதனையறிவோம் — கொடும்
வெந்தழ லில்லுடல் வேகின்ற போதிலும்
வேரோடுந் தமிழ்மறவோம்.

பைந்தமிழ் கற்றுநல் பண்புகள் பெற்றுயர்
பாங்குடன் வாழ்ந்திடுவோம் — இங்கு
செந்தமிழ் வாழத்தம் செந்நீரு குத்தோர்க்கு
சேர்ந்துசி லையமைப்போம்.

சாதி மதமென்று சாற்றும் பிரிவுகள்
சாடிய ழித்திடுவோம் — உண்மை
நீதியு யர்கல்வி நித்தமி வைவாழ
நேர்மையு டன்னுழைப்போம்.

கண்ணின் மணியினும் கன்னித் தமிழினைக்
காத்திடு வோம்பெரிதாய் — இந்த
மண்ணில் மனிதர்கள் மாண்பு தமிழிதை
மதித்திடச் செய்திடுவோம்.

ஆயுந்தொ றும்மினி தாந்தமிழ் தன்னையெம்
அன்னையெ னத்தொழுவோம் — அவள்
ஈயுமறிவெனும் இன்னொளி தன்னினால்
இவ்வுல கில்லுயர்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் விடுதலை இயக்கம் வேகம் பெற்றிட என்னசெய்யவேண்டும்

## மக்கள் குரல்

மதிப்புக்குரிய கோவை அண்ணுவுக்கு,

இலங்கையில் வாழும் தமிழர்களின் அவலக் குரலை உணர்ச்சிப்பெருக்குடன் உலகத் தமிழரெல்லாம் அறியும் வண்ணம் சுதந்திரன் மூலம் எடுத்துரைப்பவரென்பதால், (இது வெறும் புகழ்ச்சியல்ல. மனப்பூர்வமாகவே சொல்கின்றேன்.) என் உள்ளக் குமுறல்களைத் தங்களுக்கே எழுதுகின்றேன்.

நாமும் இந்த நாட்டில் பண்டு தொண்டு வாழ்ந்து வரும் பரம்பரைப் பிரசைகள் தானே? சிங்களமக்களுக்கு எவ்வளவு உரிமையுண்டோ, அந்த அளவுக்கு எமக்கும் உரிமையுண்டு. ஆனல், இலங்கை அரசோ தன் அதிகார பலத்தைக் கொண்டு எம்மை அடிமைகளிலும்—ஏன்? நாய்களிலும் கேடாக நடத்துகின்றது? நாமென்ன இறக்குமதி செய்யப்பட்ட அடிமைகளா என்ன? அடிமைகளாக இறக்குமதி செய்யப்பட்ட நீக்கிரோவர் கூட உரிமை கேட்கின்றனர்கள்—முன்னேறி வருகின்றனர்கள். ஆனல், பெருமை வாய்ந்த தமிழினம் ஈழத்தில் படும் பாடு?... தமிழினத்தில் தவறுதலாக வந்து பிறந்து விட்ட ஒரு சில தமிழ்த் துரோகிகளாலேயே, தமிழினம் காட்டிக் கொடுக்கப்பட்டு அவமானப்படுகின்றது உரிமைகளின்றி.

### அடிமைப் புத்தி

காட்டிக் கொடுப்போர் கதையை விட்டுத்தள்ளுவோம்; அவர்களுக்கும் சேர்ந்து நாமே போராடுவோம். கோழைகளான இவர்களை வம்புக்கு இழுப்பானேன். பாவம்! இயலாதவர்கள். இத்துரோகக் கும்பல் மாற்றுரின் கால்பிடித்து வயிறு வளர்த்து ஆடம்பரமாக வாழ்கின்றது. இன்றைய நிலை நீடித்தால் எதிர்காலத்தில் இவர்களின் சந்ததியும் தமிழ்க் குடியில் பிறந்த குற்றத்துக்காக ஒதுக்கப்படவே செய்வார்கள் இதை உணராமல் தற்போதைய சலுகைகளுக்காக அன்னை மொழியையே காட்டிக் கொடுக்கும் இவர்களின் அடிமைப் புத்தியை என்னவென்பது.

தமிழ் மக்கள் விழித்து விட்டார்களென்பது உண்மைதான். எனினும், இந்த விழிப்புணர்ச்சியிலும் ஒருவித தேக்கநிலை — சோம்பேறித்தனம் தென்படுகின்றதே! — இதை நோக்கும் போதுதான் தாங்க முடியாத வேதனை ஏற்படுகின்றது. அரசுக்கெதிரான எமது எதிர்ப்புக்களின் வேகம் போதவே போதாது. சில சோம்பேறிகள், செய்து முடிப்பதில்லை. எமது உரிமைப் போராட்டத்தின் கதியும் இப்படித்தான் இருக்கின்றது. வெளிநாட்டுத் தமிழர்கள் கூட, 'போராட்டம் என்னவாயிற்று?' என்று கேட்கிருர்கள். எமது எதிர்ப்புக்களை நாம் தொடர்ந்து காட்டவேண்டும். ஆரம்பத்திலிருந்த எமது வேகத்தைக் கண்டு துணுக்குற்றவர்கள் கூட இன்று அலட்சியமாக இருக்கின்ருர்கள்.

### போராட்டம் என்ருல் என்ன?

போராட்டமென்ருல் கத்திபிடிப்பது — துப்பாக்கி ஏந்தவது என்று அர்த்தமல்ல. அரசின் தவருன கொள்கையைக் கண்டித்து எதிர்ப்புக் காட்டுவதும் போராட்டந்தான். ஆமாம்! எமது உரிமைகளுக்காக— அரசு தமிழருக்கிழைக்கும் தீமைகளைப் பொறுக்கமாட்டாமல் போராடுகின்ருேம் நாம்; நியாயம் கேட்கின்ருேம் அநியாயத்தைக் கண்டித்து! எமது இரத்தத்தைச் சிந்தி, உயிரையேனும் கொடுத்து எமது உரிமைகளைப்பேணுவதே நம் இலட்சியம்! உயிரினும் மேலாம் உரிமையினைக்கோரி, உயிரையும் பலிகொடுக்கத் தயாராயிருக்கும் எங்களை, உயிர்ப் பலியெடுக்கும் பயங்கரவாதிகளைப் போலெண்ணி, மக்களிடையே பிரச்சாரம் செய்கின்ருர்கள் அரசினர். இப்போக்குக் கண்டிக்கத் தக்கதாகும்.

### அரசின் நோக்கம்


தமிழருக்குச் சிங்கள அரசு செய்யும்கொடுமைகளை மூடிமறைத்து, 'அரசியற் குழப்பம் விளைவிக்கும் பயங்கரவாதிகளாக' உலகம் எம்மை மதிக்கவேண்டும் என்பதே அரசின் நோக்கம். இலங்கைத் தமிழரின் குறைகளை வெளியுலகுக்குக் காட்டாமல் மறைக்க அரும்பாடு படுகின்றது ஸ்ரீமா அரசு. இந்தியப் பிரதமர் இந்திரா அம்மையார் அவர்கள் ஈழத் தமிழ தந்தையைச் சந்தித்துப்பேச விழைந்த போது, இலங்கை அரசின் சதியினுல் 'சந்திப்பு' நிகழவில்லையே! இது ஒன்றே போதும் இலங்கைத் தமிழர் நிலையைக் கொடிய அரசு மூடிமறைக்கப் பாடுபடுகின்றது என்பதைக் காட்ட. பூனை கண்ணை மூடிஞல் உலகம் இருண்டு விடுமா?—இது ஸ்ரீமா அரசுக்குப் புரியவில்லைப் போலும்.

சுயநலங்கொண்ட சில தமிழ்த்துரோகிகளும் (ராஜன்செல்வநாயகம் போன்ருேர்) தினசதிசெய்யும் சில பத்திரிகைகளும் வடக்கு—கிழக்கு என்ற பிரிவினை காட்டித் தமிழ் மக்களைப் பிரிக்கப்பார்க்கின்றனர். இவர்கள் போடும் நாடகம் தமிழ் மக்களிடையே எடுபடப்போவதில்லை. எனினும், பாமரமக்களிடையே இவர்களின் பிரிவினை வித்து தூவப்படாமல் —தூவப்பட்டாலும் மரமாக வளராமல் தடுக்கவேண்டியது எமது கூட்டணித் தலைவர்களின் தலையாய கடமையாகும். ஆனல், இவர்கள் [illegible] மிகவும் அமைதியாக இருக்கிருர்கள். தமிழர் கூட்டணித் தலைவர்கள் சிலரின் பேச்சுமூச்சையே காணேம். இவர்கள் [illegible] விட்டார்கள்? ஒருவேளை, தமிழுரிமை வேண்டித் தவம் செய்கிருர்களோ தெரியவில்லை!

இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் மகாத்மா காந்தி போன்ற தலைவர்கள் அயராத எதிர்ப்புக்

(8-ம் பக்கம் பார்க்க)

# மறக்க முடியாத யூன் 5



ஜூன் ஐந்து ...!

மானத்தமிழினத்தின் வாழ்வில் மறக்க முடியாத நாள்!

ஈழத்தமிழ்க்குலம் எரிமலையென வெடித்துக்கிளம்பி ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக முதல் போராட்டம் நடத்திய முக்கிய நாள்!

வாழையடி வாழையாக ஈழத்திருநிலத்தில் அரசு கட்டிலில் வீற்றிருந்து அரசோச்சிய தமிழ்மொழியை உதைத்துத்தள்ளி, வங்கத்திலிருந்து வந்து குடியேறிய சிங்கள இனத்தின் சிறுக்கிமொழியாகிய சிங்களமொழியை, சிங்காசனத்தில் ஏற்றிய 'சிங்களம் மட்டும் சட்டம்' இந்நாட்டில் புகுத்தப்பட்ட நாள்!

ஈழத்தமிழர்களின் மொழியுரிமையை முற்ருகப்பறித்து அவர்களை இரண்டாந்தரக்குடி மக்களாக்கிய வரலாற்றுக்கறை படிந்த நாள்!

மொழியுரிமை பறிக்கப்படுவதை தமிழினம் கிஞ்சிற்றும் அனுமதிக்காது; எத்தனையாயிரம் ஆண்டு சென்ருலும் சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்துப் போராடி விடுதலை பெற்றே தீரும் என்பதை ஊரறிய உலகறிய எடுத்துக்காட்டும் விதத்தில் அறப்போர்க்களத்தில் ஈழத்தமிழன் முதன் முதலாக இறங்கிய நாளும் ஜூன் 5 தான்!

ஆம், 1956ம் ஆண்டு ஜூன் ஐந்தாம் நாள் — நாடாளுமன்றத்துக்கு எதிரில்— காலிமுகத்திடலில் சிங்களம்மட்டும் சட்டத்தை எதிர்த்து — கொட்டும் மழையிலும், சிங்களக்குண்டர்களின் கொடூரத்தாக்குதலின் மத்தியிலும் — கொண்ட கொள்கையை கைவிடாது — அறப்போரில் ஈடுபட்டு — குருதியை கொட்டி நம் உறுதியை நிலைநாட்டிய வீர வரலாறுக்குரிய நாள்!

கல்லெறிபட்டு நெற்றி பிளந்த நிலையிலும் கல்போன்ற உள்ளத்துடன் அறப்போரில் ஈடுபட்டிருந்த தளபதி அமிரையும்—கொஞ்சி வளர்த்த தம் செல்வக் குழந்தைகள் கொஞ்சம்கூட ஈவிரக்கமின்றி வஞ்சகரால் தாக்கப்பட்டபோதும் நிலைகுலையாது இலட்சியப் போரில் ஈடுபட்டிருநத செல்வாவையும் — உருட்டி உருட்டி உதைக்கப்பட்டு, உடம்பிலிருந்த சட்டை கிழிக்கப்பட்டு, உபத்திரவத்துக்கு ஆளாக்கப்பட்ட போதிலும் உறுதிகுலையாதிருந்த அமரர் வன்னியரையும்— இன்னும் சொல்லொணுத்துன்பங்களையெலாம் ஏற்றுக்கொண்டு தமிழ் காக்கும் போரில் ஈடுபட்டிருந்த எண்ணற்ற தமிழ் வீரர்களையும் கண்டு உலகம் வியந்த நாள்!

1973ம் ஆண்டு ஜூன் 5 — அந்த வீர வரலாற்றின் 17வது நினைவுதினம்! அந்தக் காட்சிகள் அனைத்தும் இன்றும் நம் கண் முன்னுல் தெரிகின்றன!

ஆம், அந்த வீரமிக்க நினைவுகள் — 17 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற தமிழினத்தின் முதல் போராட்ட நினைவுகள் — நமக்கு இன்றும் புதிய வேகம் சேர்க்கின்றன — விடுதலைப்போரை விரைவு படுத்தத்தூண்டுகின்றன!

— கோவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## மொழியை சிதைக்கும் மற்றோர் சதி!

ஈழத்தில் தமிழ்மொழியின் உரிமை அரசியல் ரீதியில் பறிக்கப் பட்டிருப்பது மட்டுமல்ல—மொழித்துறையிலும் தமிழின் தனித்துவத்தையும் பழம்பெரும் மரபையும் சிதைத்து சீரழித்திட திட்டமிட்ட சதிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

தமிழ்மொழிக்குள் சிங்களச்சொற்கள் திணிக்கப் படுகின்றன. லக்சல, சல்பில, லங்காபொற, லங்காசம், போன்ற ஏராளமான சிங்களச் சொற்கள் தமிழ்மொழிக்குள் திணிக்கப்பட்டுள்ளன. இன்றைய தமிழ்க் குழந்தைகள் லக்சல, சல்பில போன்ற சொற்களும் தமிழ்சொற்களென்றே நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழ் மொழிக்குள் திட்டமிட்ட சிங்கள ஊடுருவல் நடைபெறுகிறது.

உருப்பெயர்த்தல் என்ற பெயரில் தமிழின் உயிரை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் மொழித்திணைக்களத்திலுள்ள அரசாங்கத்தின் கைப்பாவைகளான தமிழுணர்ச்சியற்ற தமிழ் 'அட்வைசரி' குழுவினர்.

'சிங்கள எழுத்தின் அமைப்பை பின்பற்றி தமிழையும் கோணலாக எழுதும் முயற்சியும் நடைபெற்றுவருகிறது. இதுபற்றி சில வாரங்களுக்கு முன்னர் விரிவான கட்டுரையொன்றை சுதந்திரனில் வெளியிட்டிருந்தோம்.

இப்பொழுது மொழியை சிதைத்து அழிக்கும், மற்றோர் கூக்குரல் கேட்கத்தொடங்கியிருக்கிறது.

'தமிழுக்கும், சிங்களத்துக்கும் பொதுவான ஒரு வரிவடிவம் கண்டு பிடிக்கப்படவேண்டும். அப்படிச்செய்வதன் மூலம் தேசிய ஒற்றுமையை வளர்க்கவும், மொழிப்பிரச்சினையைத் தீர்க்கவும் முடியும்.' — என்று ஒருவர் பிதற்றியிருக்கிறார்.

இந்த 'அபார' யோசனையை வெளியிட்டிருப்பவர் தொல்பொருள் ஆய்வுத்துறை உதவி ஆணையாளர் டாக்டர் டபிள்யூ. எஸ். கருணரத்தின அவர்கள்தான்!

தொல்பொருள் ஆய்வுத்துறை, இந்நாட்டில் வாழும் தமிழினத்தின் பழைய வரலாறுகளை மூடிமறைத்து, சிங்கள இனத்தின் பழம் பெருமையை நிலைநாட்டும் வகையிலேயே தனது தொல்பொருள் ஆய்வுகளை நடத்தி வருவதாக ஏற்கெனவே தமிழ் மக்களின் உள்ளங்களில் ஓர் அழுத்தமான கருத்து இருந்து வருகிறது.

இந்த நிலையில் தொல்பொருள் ஆய்வுத்துறை துணை ஆணையாளரின் புதிய யோசனை தமிழ்மக்களின் சந்தேகத்தை மேலும் ஊர்ஜிதப்படுத்துவதாகவேயிருக்கிறது.

ஏனெனில் தமிழர்கள் தங்கள் மொழியை தங்கள் உயிராகவே கருதுபவர்கள். தமிழ்மொழியின் தனித்தன்மையை, பழம்பெரும் மரபை சிதைத்திட எந்தக் கட்டத்திலுமே தமிழ் மக்கள் அனுமதித்திட மாட்டார்கள்.

தமிழின், மொழி மரபும் தனித்தன்மையும் பாதுகாக்கப்பட்டு வந்தபடியினுல்தான் இரண்டாயிர, மூவாயிர ஆண்டுகளுக்கு முன்தோன்றிய திருக்குறளையும், தொல்காப்பியத்தையும் இன்றும் நம்மால் படித்துணர முடிகிறது. இதே மரபையும் தனித்தன்மையையும் தொடர்ந்தும் நாம் பாதுகாத்து வந்தால் மட்டுமே, இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு பின்வரும் சந்ததியும் இத்தகைய பழம்பெரும் இலக்கியங்களை — இலக்கண நூல்களை படித்துணர முடியும்!

சிங்கள மொழி, பல்வேறுமொழிகளிடத்தும் கடன் வாங்கி இணைக்கப்பட்ட 'சாம்பார்' மொழியாக இருக்கலாம். இப்போதைய வரிவடிவத்தை மாற்றியமைப்பதால் சிங்களத்துக்கு எந்த நட்டமும் ஏற்படமுடியாது. ஏனெனில் தமிழில் இருப்பதுபோன்று பழம்பெரும் இலக்கிய, இலக்கண நூல் வளம் எதுவும் சிங்களத்தில் கிடையாது.

ஆனல் வரிவடிவத்தை மாற்றியமைப்பதால், மிகப்பெரும் ஆபத்து தமிழுக்கே ஏற்படும். தமிழின் தனித்துவம் கெடும்—மொழி சிதையும். தமிழ் மொழியிலுள்ள எண்ணற்ற பழம்பெரும் இலக்கியங்களை வருங்கால தமிழ்மக்கள் படித்துணர முடியாதநிலை உருவாகும். தமிழ் நாட்டில் பேசப்படும் தமிழ் மொழியும், இங்கு பேசப்படும் மொழியும் மாறுபட்டு தமிழகத்து மக்களிடமிருந்து, இனத்தால், மொழியால் கலாசாரத்தால், நாம் பிரிக்கப்படுவோம்! சுருங்கச்சொன்னல் தமிழினமே அழிந்துவிடும். ஆம், மொழி அழிந்தால், இனம் அழியும்!

தமிழ்மொழிக்கு இவ்வளவு ஆபத்துக்களைத் தரும் யோசனைதான், டாக்டர் கருணரத்தின வெளியிட்ட 'பொதுவரிவடிவம்', என்கின்ற யோசனையாகும்.

தமிழ்மொழியை சிதைத்து, சின்னபின்னப்படுத்த வழி வகுத்திடும் எந்த யோசனையையும்—எந்தத்திட்டத்தையும், தமிழ் மக்கள் மூர்த்தண்யமாக எதிர்த்து நிற்பார்கள் என்பதை டாக்டர் கருணரத்தின போன்ருேர் புரிந்துகொள்ள வேண்டும்.

மொழியை சிதைப்பதாலோ, அதன் தனித்துவத்தை அழிப்பதாலோ 'பொதுவரிவடிவத்தை' கொண்டுவருவதாலோ இந்நாட்டில் தேசிய ஒற்றுமையை வளர்க்கவும் முடியாது; மொழிப்பிரச்சினையைத்தீர்க்கவும் முடியாது என்பதை டாக்டர் கருணரத்தினவைப் போன்றவர்கள் உணரவேண்டும்.

எல்லா மொழிகளினதும் தனித்துவத்தையும், மரபையும் பேணிப்பாதுகாத்து, அந்தந்த மொழிகளின் தனித்துவம் கெடாமல், அவற்றை வளர்த்துவருவதற்கு உதவுவதன் மூலமே நாட்டில் உண்மையான தேசிய ஒற்றுமை தோன்ற முடியும்!

நாட்டின் ஐக்கியத்தைப் பிளக்கும் கொடு வாளாக இன்று விளங்குவது — 'சிங்களம் மட்டும், சிங்களவர் மட்டும்' என்ற வகுப்புவாதக் குறுகிய இனவெறிக் கண்ணேட்டம்தான்! இந்த 'மட்டும், என்ற குறுகிய இனவாதக் கண்ணேட்டத்தை கைவிட்டு, சிங்கள அரசியற் தலைவர்கள், 'சிங்களமும் தமிழும்' ''சிங்களவர்களும் தமிழர்களும்'' எனும் கொள்கையை ஏற்காவிட்டால், நாடு பிளவுபடுவதை கடவுளாலும் தடுக்க முடியாது!

இந்த யதார்த்த நிலையை டாக்டர் கருணரத்தின போன்றவர்கள் புரிந்துகொண்டு ''பொதுவரிவடிவம்'' போன்ற மொழியை சிதைக்கும் கூக்குரல்களை கிளப்பி தமிழ் மக்களின் உள்ளத்தை புண்படுத்தாமலிருப்பார் களா?

# மாடப்புருக்களுக்குக் காட்டும் கருணை மலையகத் தமிழர்கள் மீது இல்லையா?

## இந்த மண்ணுக்காக உழைத்தவர்களுக்கு மண்ணுரிமையை மறுப்பதா சமதர்மம்?

மலை நாட்டிலே பிறந்து மலை நாட்டிலேயே வளர்ந்த தமிழ் மக்கள் இந் நாட்டின் அரசாங்கம் கடைப்பிடித்து வரும் கொள்கையினல், செயல்பட்டுவரும் விதத்தினுல்—தமது வீடு வாசல்களை இழந்து, தம் வேலை வாய்ப்புகளை இழந்து, தாம் உயிர் வாழ்வதற்காக தாம்பிறந்து வளர்ந்த இடங்களையே விட்டு வெளியேறி தமக்குப் புதிய இடமாகிய மட்டக்களப்புப் பகுதியில் சென்று காடு வெட்டி, மண் கொத்திப் பாடுபட்டுப் பயிர் செய்த நிலங்களில் இருந்தும் அவர்களைத் துரத்தி அடிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றதாம், சமதர்மம், மனிதாபிமானம் என்றெல்லாம் பேசிவரும் இன்றைய அரசாங்கம்!

தான் பிறந்து வளர்ந்த ஊரிலேயும் ஒருவனுக்குவாழ வழி விடுவதில்லை, வசதி கொடுப்பதில்லை அவன் வேறு இடத்திலேயும்சென்றுவாழ்வதற்கும் இடம் அளிப்பதும் இல்லை என்ருல் அந்த மனிதன் வேறு எங்கே போவது? மேலே போவதா? அன்றிக் கீழே போவதா? இல்லை என்ருல், கொலை செய்து கொள்ளை அடித்துக்களவெடுத்துச் சீவிப்பதா? இல்லாது போனல், பிச்சைஎடுப்பதா? ஒருவனைத் தானகவே உழைத்தும் பிழைக்க விடாதவர்கள் பிச்சை போட்டு விடவா போகிருர்கள்?

மலை நாட்டுத் தமிழர்கள் என்று சொல்லப்படும் இந்த அப்பாவி மக்கள் இந்த அரசாங்கத்திடம் தாம்தொழில் செய்வதற்கு தங்களுக்கு முதல் தரும்படி கேட்கவில்லை; கடன் தரும்படி கேட்கவில்லை. தளபாடங்கள் தரும்படி கேட்கவில்லை. எதுவுமே கேட்கவில்லை. அவர்கள் ஆண்டவன் படைத்துள்ள பூமியில் — பயிரிடப்படாமல் கிடக்கும் தரிசு நிலத்தில் — தன்னுடைய குழந்தைகளில் யாராவது தன் மேனியைப் பசப்படுத்தி பயிர் செய்து வளமாக்கி அழகு செய்ய மாட்டார்களா என்று ஏங்கிக் கிடக்கும் நம் பூமாதேவியின் ஆசையைப் பூர்த்தி செய்ய விடும்படிதான் கேட்கிருர்கள்; கல்லும் முள்ளும் காடுமாகக் கிடந்த மலை நாட்டை வளமாக்கி அழகாக்கிய இந்த மலைநாட்டுத் தமிழர்கள்.

ஆனல் இந்த அரசாங்கமோ அந்த மக்களை, எதுவோ காட்டு மிருகங்களை வேட்டையாடுவதைப் போலத்துரத்திக் கொண்டு செல்லுகின்றது!

காட்டுமிருகங்களுக்காவது கருணை காட்டுவார்கள் — ஆம் வனவிலங்குபரிபாலனங்களுக்குப் பிரத்தியேக இடங்கள் என்று ஒதுக்கி, அதற்கென்று இலாகாக்களும் உத்தியோகத்தர்களும் நியமித்து இருக்கிருர்கள், இல்லையா?— ஆனல் மலைநாட்டுத் தமிழர்களை மட்டும் மிருகங்களிலும் கேவலமாகப் பாவித்து வேட்டையாடிச் செல்லுகின்ருர்கள்! என்னே கருணை!

கொழும்புதுறைமுகத்தில் வந்துறைந்து அங்கு நடைபெறும் வேலைகளுக்கு இடைஞ்சலாகவும் அங்கு வந்திறங்கும் உணவுப் பொருட்களுக்குச் சேதமாகவும், இருக்கும் மாடப்புருக்களைத் துரத்தி விடவேண்டும் என்ற யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்ததினல் அந்த யோசனையைக் கைவிட்டு தங்களின் ஜீவகாருண்யத்தைப் பெரிய விளம்பரம் செய்தது இந்த அரசாங்கம் வெகு சமீபத்தில்.

ஆனல் மலை நாட்டில் வாழ்வதற்கு வழியும் வகையும் இல்லாததால் மட்டக்களப்பில் தரிசாகக் கிடக்கும் நிலத்தில் சென்று தமக்கு வாழ்வுதேட முனைந்துள்ள மனிதர்களை விரட்டியடிக்கப் போகிருர்களாம்! துப்பாக்கி கொண்டு துரத்தப்போகிருர்களாம்! அதற்காக பொலிஸ் படை என்றும், கடல் படை என்றும் தரைப் படை என்றும் அனுப்பியிருக்கிருர்களாம்! மாடப்புருக்களுக்குள்ள மரியாதை மனிதர்களாகிய மலைநாட்டுத் தமிழர்களுக்குக் கிடையாதா?

மலைநாட்டுத் தமிழர்களை இவர்கள் எதற்காக இப்படி வேட்டையாடுகிருர்கள்? அவர்கள் இந்திய வம்சாவளியினர் என்பதினுல் தானே!

இந்தியாவிலே இருந்து வந்தவர்களே— இந்தியாவிலே பிறந்து இந்தியாவிலே வளர்ந்து இந்தியாவிலே இருந்தே அகில உலகத்துக்கும் அன்பைப்போதித்த புனிதன் புத்தபெருமானின் வாரிசுகள் தாங்கள்தான் என்று சொல்லிப்பெருமை அடித்துக்கொள்ளும் சிங்கள மக்களின் அரசாங்கம்—இந்தியாவிலே இருந்து வந்த மக்களை, அவர்கள் தங்களிலும் பார்க்கப் பிந்தி வந்தவர்கள் என்பதினல்—அடித்துத் துரத்துகின்ருர்கள். தங்கியிருக்கக்கூட இடமோ, அவகாசமோ கொடுக்காமல் வேட்டையாடிச் செல்லுகிருர்கள்.

முடமான இள மறியைத் தோளில் சுமந்து சென்ற புத்தன், வில்லால் எய்து வீழ்த்தப்பட்டு குற்றுயிராய்க் கிடந்த புறுவை அதை எய்து வீழ்த்தியவனிடம் கொடுக்க மறுத்து அதற்குச் சிகிச்சை செய்து அதன் உயிரைக் காப்பாற்றிய புத்தரின் போதனைகளைப் பின் பற்றுகின்றவர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் மனிதனை, அவன் இருந்து உறங்கக் கூட விடாமல், வேட்டையாடித் துரத்திச் செல்லுகிருர்கள்; பொலிஸ் படை கடற்படை தரைப்படைகளை அனுப்பி!

எதுவோ, தாங்கள் இந்தியாவில் இருந்து வந்து பொழுது மட்டக்களப்பு மண்ணையும் தங்களோடு தூக்கிக்கொண்டு வந்தவர்கள் போலவும், இந்தியாவில் இருந்து பிந்தி வந்த இந்த மக்களுக்கு அந்த மண்ணில் பாத்தியதை கொண்டாட உரிமை இல்லை என்பது போலவும் நடந்துகொள்ளுகிருர்கள் இந்த அரசாங்கத்தினர்!

நாட்டிலே, தானிய உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று கூச்சல் போடுகிருர்கள். அப்படிப் பெருக்க முன்வருபவர்களுக்கு தாம் உதவி அளிப்பதாகவும் கூறிக் கொள்ளுகிருர்கள். ஆனல் இந்த மலைநாட்டு மக்கள், இவர்களிடம் உதவி எதுவும் கேளாமல், தாமாகவே உற்பத்தியைப் பெருக்க முயற்சி செய்யும் பொழுது. அதைச் செய்ய விடாமல் அவர்களை வெருட்டுகிருர்கள், துரத்துகிருர்கள், ஆண்டவன் எல்லாருக்கும் பொதுவாகப் படைத்த பூமிக்குச் சொந்தம் பாராட்டி! இன்னும் கொஞ்சக் காலம் போனல், காற்றுக்குக்கூடச் சொந்தம் பாராட்டுவார்கள் போலும்!

சமதர்மம் பேசி முழக்கம் செய்யும் இந்த அரசாங்கம், மனிதாபிமானம் பேசிப் பறைசாற்றும் இந்த அரசாங்கம், புத்தபெருமானின் போதனைகளைப் போற்றிப் பேணுவதாகச் சொல்லிப் புத்த மதத்தை அரசாங்க மதமாக்கியிருக்கும் இந்த அரசாங்கம் அன்ருடச் சீவியத்துக்கு வழியில்லாமல் வாடும் மக்கள் தம் பசிப் பிணியைப் போக்கிக் கொள்ளும் பொருட்டுப் பாடுபட்டுப் பண்படுத்திப் பயிர் செய்த நிலங்களில் இருந்து

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அத்தியாயம் (13)

மனித வாழ்க்கையை எதற்கெல்லாமோ ஒப்பிட்டுக் கூறுகின்றனர். ஆனால் வாசுதேவன் அடிக்கடி கூறுவான் 'ராதா வாழ்க்கை என்பது சூதாட்டம் போன்றது. ஒவ்வொரு விநாடியும் என்ன நடக்குமோ என ஒவ்வொருவர் மனமும் துடித்துக் கொண்டிருக்கும். ஆனால் முடிவில் யாரோ ஒருவர் ஜெயிப்பது உறுதி. அப்படித்தான் நாமும் வெற்றியடைவோம் என்று நினைத்துக்கொண்டிருக்கையில் தோல்வி நம்மை நெருங்கி விட்டால்போதும். திணறிப்போய் விடுவோம். ஆனால் வெற்றியை நினைக்காமல் நடப்பது நடக்கட்டும் என்று ஆண்டவனை நினைத்திருந்தால் எதையும் தாங்கிக் கொள்ளும் உறுதியை இறைவன் நமக்கு அளிப்பான்.' என்று வாசுதேவன் கூறியவாக்கியங்களே சுகுணாவைக் கண்டபொழுது ராதாலட்சுமியின் மனதில் தோன்றிற்று. அவள் அவர்களைச் சமீபித்ததும், 'குட்மோனிங் ராதா' என்றாள்.

'குட் மோனிங் சுகுணா. மிஸ்டர் வாசு இப்பொழுது தானே போனார். சந்திக்கவில்லையா?'

'அடடே நான் காணவில்லையே. பரவாயில்லை. நீர் எப்போ புறப்படுகின்றீர்? இது—' என்று கவிதாவைப் பார்த்தாள்.

'என் அக்காள் கவிதா. காரிலேயே வந்திருக்கின்றார்கள். இவர்களுடன் போகலாம்.' என்றவள், 'அக்கா! இவளை உங்களுக்கு ஞாபகம் இருக்கின்றதா?' என்று கவிதாவிடம் கேட்டாள்.

'இல்லையே; எனக்கெப்படித் தெரியும்?'

'கல்லூரி டிராமாவிலே ஹிரோயினா நடிச்சது இவள் தான்.'

''ஓ—எப்படி பரீட்சை நன்றாகச் செய்தீர்களா?'

'நன்றாகவே செய்தேன்.' என்றாள் சுகுணா.

வேறு விடயங்கள் பற்றி அதிகம் கதைக்காமல் சுகுணா தேவி விடைபெற்றுச் சென்றது ராதாலட்சுமிக்குப் பெரும் நிம்மதியாக இருந்தது.

'ஏன் லட்சு நீ டிராமா பற்றிக் கூறியதும் தான் எனக்கு ஞாபகம் வருகின்றது. நரசிம்ம பல்லவனாக நடித்தது இந்த வாசுதானே?'

'கரெக்டா சொல்லிட்டீங்களே' என்றாளாயினும் உள்ளூரப் பயமாகவே இருந்தது.

கவிதா மௌனமாகவே இருந்தாள். அவள் எந்த நினைவில் அமிழ்ந்திருக்கின்றாள் என்று அறியமுடியாமல் உள்ளூரத் தவித்தாள் ராதாலட்சுமி. ஒருவர் மனதை மற்றவர் அறிந்து கொள்ள முடியாத நிலையில் மௌனப் போராட்டம் நடந்துகொண்டிருந்தது. சில விநாடிகளின் பின்பு கவிதாவே கேட்டாள்.

'ஏன் ராதா அந்த வாசு எப்படிப்பட்டவன்?'

'ஏன்? நீ அவருக்குப் பெண் பார்க்கப்போறியா?'

'உதுதானே உனக்குக் கூடாத குணம். கேட்டால் சொல்லேன்டி.'

'அக்கா! அவனைப்பற்றி எனக்கென்ன அக்கறை. அவன் ஓர் அப்பாவி. ஏழைப் பையன். ஆனால் குணத்துக்கு மட்டும் 'கரண்டி' பண்ணலாம்.'

'பணமில்லாத இடத்தில் குணமிருந்து என்னடி பயன்? நீயே சொல். அவனை மிகக் குணவான் என்று சொல்லுகிறாய். நீயே அவனைக் கல்யாணம் செய்வியா?'

'அக்கா!' என்று ஆச்சரியத்துடன் கத்தினாள் ராதாலட்சுமி.

'சும்மா ஒரு கதைக்குத் தான்டி கேட்டேன். நல்ல பார்சனாலிடியாய் இருக்கான். நிறம் கொஞ்சம் குறைவாக இருந்தாலும் அவனிடம் ஒருவித கவர்ச்சி இருக்கடி ராதா. அந்தச் சுகுணா ஏன் அவனைத் தேடி—' என்று ராதாலட்சுமி பக்கம் திரும்பினாள்.

'அக்கா! சுகுணா ஒரு ரகமானவளாகத் தான் இருந்தாள். அவளைக் கூட அந்த வாசு நல்லவளாக மாற்றி விட்டார். அவர் அப்படிப்பட்ட குண இயல்புள்ளவர்.'

'சரி நமக்கேன் வீண்கதை நீ குளித்துவிட்டுப் புறப்பட ஆயத்தமாயிரு' என்றாள்.

ராதாலட்சுமி குளியலறைக்குள் சென்றாளாயினும் அவள் மனமு கவிதா கூறிய கதையிலேயே லயித்து நின்றது 'நான் தான் வாசுவிடம் ஏதோ கவர்ச்சி இருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தேன். கவிதா கூடக்கூறுகின்றாளே! இப்படித்தான் ஒவ்வொருவரும் அவரில் மயங்கிப்போகின்றார்களோ? கல்யாணமான அக்காளே இப்படியென்றால்——' என்று எண்ணிக் கொண்டே ஆடைகளைக் களைந்து விட்டுப் பைப்பைத் திருகினாள். தண்ணீர் பன்னீர் மழையாக அவள் பூவுடலைத் தழுவிற்று. சூடேறிக் கதகதப்பாயிருந்த அவள் உடலுக்கு குளிர்ந்த நீர் மிக இதமாக இருந்தது. அன்றிரவு வாசு அவளைக் கட்டியணைத்தது போன்ற உணர்வு ஏற்படவே, 'வாசு வாசு' என்று அவள் செம்பவழ உதடுகள் முணுமுணுத்தன.

அதே சமயம் குருநாகலுக்குச் செல்லும் பஸ்வண்டியில் அமர்ந்திருந்தான் வாசுதேவன். தன் வாழ்வில் ஏற்பட்ட மாறுதல்களை எண்ணியெண்ணி வியந்து கொண்டிருந்தான்.

பெண்களிடம் அன்பு வைப்பதே ஆணின் பலவீனத்துக்கு அடிப்படைக் காரணியாக அமைந்து விடுகின்றது. சிற்றின்பம் என்ற பள்ளத்துள் அவனைச் சறுக்கி விழுத்தக் காரணமாக அமைந்த அன்புணர்ச்சியை நினைத்து வெட்கினான் எப்படி இந்தப் பிணைப்பிலிருந்தும் விடுபடப் போகின்றேன், அல்லது அவ

(6-ம் பக்கம் பார்க்க)

## சங்கப் பலகை

நூல்: உனக்காக, கண்ணே!

ஆசிரியர்: சிற்பி.

பதிப்பு: முத்துச் சுடர், ஜுப்லி பசார், யாழ்ப்பாணம்.

ஈழத்தின் முன்னணி எழுத்தாளர்களில் ஒருவரான 'சிற்பி'யின் 'உனக்காக, கண்ணே' நாவல் 'முத்துச் சுடர்' மன்றத்தின் முதல் வெளியீடாக நூலுருவில் வெளிவந்திருக்கிறது.

ஈழத்துத் தமிழ் நாவல் என்றால், அது சாதிப் பிரச்சினைகளையும் முதலாளி—தொழிலாளி வேறுபாடுகளையும் மையமாகக் கொண்டு தான் தோன்றவேண்டும் என்பதில்லை. 'சிற்பி' ஐயா காதலை வைத்தே ஆபாசம் துளியும் கலவாமல் எவ்வளவு சிறந்த ஒரு கதையைப் படைத்திருக்கிறார்!

நாவலின் நாயகனான சண்முகம் ஓர் ஆசிரியர். அத்துடன் ஓர் எழுத்தாளனும் கூட. அதனால் தானோ என்னவோ, நாவல் ஆசிரியரின் இலட்சியப் படைப்பாகவே விளங்குகிறது. சண்முகத்துக்கு ஏற்படும் சோதனைகள்—துன்ப துயரங்களை கண்டு நாம் பல இடங்களில் கலங்குகிறோம். நாவல் காதல் கதை மட்டுமல்ல, துயரம் நிறைந்த காதல் கதையும் ஆகும்!

இதுபோன்ற துன்பக் கதைகள் தாம் வாசகர்களிடையே எடுபடும் என்பதையும் இடையிலே ஓரிடத்தில் விளக்கியிருக்கிறார். 'துன்பக் கதைகளைப் படிப்பதில் வாசகர்களுக்கு இருக்கும் ஆவலும் ஆர்வமும் இன்பக் கதைகளைப் படிக்கும்போது இருப்பதில்லை. அதனுற்றான் இன்றும் 'அம்பிகாவதி—அமராவது' லைலா—மஜ்னு அனார்கலி—சலீம், கதைகளை விழுந்து விழுந்து படிக்கிறார்கள். இந்தக்கதைகள் சாகாத காதல் கதைகளாக இனமத மொழி வேறுபாடுகளை கடந்து எல்லார் இதயத்திலும் சிரஞ்சீவிக் கதைகளாக விளங்குகின்றன.'

கதை துன்பக் கதையாக இருந்தாலும் ஆசிரியரின் எழுத்து நடை இனிக்கிறது. வாசகர்களுக்குச் [illegible]டாத இனிய த[illegible]பாக அமைந்த எதுகை மோனைகளும் உரை நடைக்குக் கவிதைத் தன்மையைச் சேர்க்கிறது. ஆமாம் தமிழின் சுவைக்காககூட 'உனக்காக, கண்ணே' நாவலைப் படிக்கலாம்.

நூலில் 'சந்திப்போம்' பகுதியில் தேவன் — யாழ்ப்பாணம் அவர்கள் ஆசிரியரைச் சரியான முறையிலே அறிமுகம் செய்துவைக்கிறார் 'சந்திப்போம்' பகுதியில் செங்கை ஆழியான் விமர்சகன், வாசகன் என்ற இரு நிலைகளில் நின்று நாவலை மதிப்பீடு செய்திருக்கிறார். 'இதய வாசல்' பகுதியில் ஆசிரியர் கதை தோன்றிய காரணத்தை விளக்கியுள்ளார். 'இது முழுக்க முழுக்க நடந்த கதையன்று! முற்றாக நடக்க முடியாத கதையுமன்று' என ஆசிரியர் சொல்லியிருப்பதை, நாவலைப் படித்த நாமும் ஏற்றுக் கொள்கிறோம்.

உயர்ந்த தாளில் அழகான அச்சுப் பதிப்புடனும், 'வி. கே. யின்' மூவர்ண அட்டைப் படத்தோடு வெளிவந்துள்ள இந்த நாவலில் விளம்பரங்களும் உண்டு. இல்லாவிட்டால் இத்தனை உயர்ந்த ஒரு நாவலை இத்தனை மலிவாக (ரூபா: 3/25) நாம் பெறமுடியுமா?

—பா. ச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராதையின் நெஞ்சம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ளது அன்பு இராச்சியத்துக்கு உரிமையாளனுகப் போகின்றேன் என்று இருபக்கத்துக்குமான கருத்துக்களுடன் போராடிக்கொண்டிருந்தான்.

மறுநாள் அன்னையிடம் பரீட்சை பற்றிய விபரங்களை கூறிவிட்டு, ஓர் ஆங்கில நாவலை எடுத்துக்கொண்டு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தான். 'அயன்ப்பிளேமிங்'கின் நாவல் என்றால் அவனுக்கு வேறு எதுவுமே தேவையில்லை; பலநாட்களாகத் தேடித் திரிந்தும் கிடைக்காமல் நண்பனொருவனிடம் வாங்கி வைத்திருந்தப்புறம் ரஷ்யா வித் லவ்' என்ற நாவலில் மூழ்கியிருந்தான். வெளியே 'பெல்' சத்தம் கேட்டது. முதல் மணி அடித்த பொழுது அவன் எழுந்திருக்கவில்லை. இரண்டாவது தடவையும் மணி அடித்த பொழுது, 'அம்மா பெல் சத்தம் கேட்கிறது; பாருங்கோ' என்றான்.

வெளியே சென்ற அவன் தாய் ஒரு பதிவுக் கடிதத்துடன் வந்தாள் அதுவும் அரசாங்கப் பதிவுக் கடிதமாக இருக்கவே நாவலை மூடி வைத்து விட்டு, அவசர அவசரமாகக் கடிதத்தைப் பிரித்துப் படித்தான். படித்து முடிந்ததும் கையில் பிடித்த கடிதத்துடன் தாயின் இரு பாதங்களையும் பற்றிக்கொண்டு, 'அம்மா! என் முயற்சிக்குவெற்றிகிடைத்து விட்டது. என்னை ஆசிர்வதியுங்கள்' என்றான்.

'என்னப்பா அப்படி நல்ல காரியம்?' என்று அவன் தலையை வருடினுள் பாக்கியலட்சுமி.

'எனக்கு வேலை கிடைத்து விட்டதம்மா.'

'முருகா! ஆண்டவனே! உன் கருணையே கருணை!' என்று இறைவனை வணங்கியது அந்த அன்னை உள்ளம்.

அந்த மகிழ்ச்சியான செய்தியை ராதாலட்சுமிக்குக் கூறவேண்டும் என்று துடித்தது அவன் இதயம். எப்படிச்சொல்வது? யாரிடம் கூறுவது? ஒன்றும் புரியாமல் தவித்தான் வாசுதேவன்.

இந்த மனம் இருக்கே, இது சகதியில் நட்டகோல் போன்றது. நிலையாய் நிற்காது. எந்தப் பக்கம் எப்பொழுது சாயும் என்று அறிய முடியாது. இதை நன்கு அறிவான் வாசுதேவன் ஆனாலும் அவளிடம் ஏற்பட்ட பற்றைக் குறைக்க முடியாத படி நாளடைவில் கூடச்செய்து விட்டாளே ராதா. இதைப் பற்றென்பதா? ஆசை என்பதா? பற்றுக்கும் ஆசைக்கும் இடையே நீண்ட இடைவெளி உண்டே. அவளிடம் நான் வைத்துள்ளது ... தூய அன்பு! இப்படி நான் புனித நாமம் சூட்டினுலும் உண்மை அதுவல்ல. அவளிடம் நான் வைத்திருப்பது ஆசை. அவள் பிறர் பொருள். அவளை அடைய நினைப்பது ஆசையில்லாமல் வேறு எப்படி இருக்க முடியும்? பல்வேறு கருத்து மோதல்களிடையே யாரோ ஒரு மகான் கூறிய வாக்கியம் அவன் சிந்தனையில் மிதந்தது. பற்று என்பது உனது பொருளில் உள்ளம் வைப்பது. ஆசை என்பது பிறர் பொருளில் உள்ளத்தைச்செலுத்துவது. பற்று வைத்திருப்பதில் குற்றம் இல்லை. ஆனல் ஆசை வைத்திருப்பதினுல் பெருங்கேடு வரும்! என்ற அந்தக் கூற்றில் நிறைய உண்மை இருக்கென்பதை உணர்ந்து கொண்டான்.

'வாசு! வீட்டைப்பார்த்துக்கொள். கோவிலுக்குப் போய்விட்டு வாரேன்.' என்று புறப்பட்டாள் பாக்கியலட்சுமி.

'சரி அம்மா' என்று கூறிவிட்டு, பேப்பரும் பேனையும் எடுத்துவர அறைக்குள் சென்றான்.

அதே சமயம் வீட்டுக்கு வெளியே யாருடனே தாய் கதைக்கும் குரல் கேட்டது. பக்கத்து வீட்டுக்காரருக்கு அந்தச் சந்தோஷச் செய்தியைக் கூறுவதாகத்தான் வாசுதேவன் நினைத்தான். ஆனல் அடுத்துக்கேட்ட குரலிலிருந்து அங்கே சித்திரா வந்திருப்பதை அறிந்து கொண்டான். 'நீங்கள் போய் விட்டு வாங்கோ நான் இங்கே இருக்கிறேன்.' என்று கூறிவிட்டு வீட்டுக்குள் ஓடிவந்து வாசற்படியிலே நின்றுகொண்டாள். அவள் வந்து நின்றதைத் தெரிந்து கொள்ளாதவன் போல் பாசாங்கு செய்தான் வாசுதேவன். அவள் மெல்ல மெல்லப் பின்னல் வந்து அவன் கண்களைப்பொத்தினுள். அவன் அதற்கும் எதுவுமே பேசாமல் நிற்கவே அவளுக்கு அழுகை வந்துவிட்டது. விக்கல் எடுத்து அழ ஆரம்பித்துவிட்டாள்.

'ஏய் சித்திரா! என்ன இது? ஏன் அழுகின்றாய்?' என்று கேட்டான்.

அவளால் பதில் கூற முடியவில்லை. மேலும் பொருமி அழத்தான் முடிந்தது. அவன் தன்னை உதாசீனம் செய்வதாக நினைத்து விட்டாள் அந்தப் பேதைப் பெண். இதற்குக் காரணம் மற்றவர்களை விடத்தான் ஒருவிதத்தில் தாழ்ந்தவள் என்ற மனப்பான்மையே. பேதமையின் பாற்பட்ட இந்த நினைவால் தன்னைத் தானே வருத்துவதுடன் பிறரையும் வருத்த ஏதுவாக அமைந்து விடுகின்றது.

'என்ன சித்திரா இது? நான் என்ன செய்ததற்காக இப்படி அழுகின்றாய்?இப்படி அழுவதை யாராது பார்த்தால் என்ன நினைப்பார்கள்? நான் ஏதோ தவறு ...' என்று அவன் நிறுத்துவதற்கிடையில் பீறிட்டு வந்த அழுகையையும் நிறுத்தி விட்டு ஓரடி பின்னல் நகர்ந்தாள் சித்திரா. அவள் அப்படிக்கூறியதும் அவளுடைய தன்மான உணர்வு பீறிட்டெழுந்தது.

'என்ன சொன்னீங்க? உங்களை ....அந்தளவுக்கு நீங்கள் என்னை உதாசீனம் செய்யுறீங்கள். இல்லை நீங்கள் என்னிடம் அன்பு காட்டுவதாய் இதுவரை என்னை நானே ஏமாற்றி வந்தேனே! அதற்கு இதுவும் வேண்டும். இன்னமும்வேண்டும். இனி... இனி... நான் இந்தப் பக்கமே வரலை.' என்று திரும்பினுள்.'

அவளுடைய மனநிலையை ஒருவாறு புரிந்துகொண்ட வாசு திடீரென அவள் கையைப் பற்றி இழுத்தான்.

'என் கையைப் பிடித்திருப்பதை யாராவது பார்த்தால் உங்களைத் தவருக நினைப்பார்கள். நான் உங்களோடு தனியே இருக்கக் கூடாது. பேசக் கூடாது. தொடக் கூடாது. இப்படி நீங்கள் நினைக்கக் காரணம்? எனக்குத் தெரியும்.'

'என்னடி தெரியும் உனக்கு?' அவனும் சற்று கோபமுள்ளவன் போலவே கேட்டான்.

'நீங்கள் இப்போ படிப்பால், அந்தஸ்தால் உயர்ந்திட்டீங்கள்.'

'சித்திரா'

'ஆமாம் பெரிய இடத்துப் பெண்களோடு பழகலாம். அதுக்கு மட்டும் ஏதும் வராது. நான் அனுதை. அதனுல் உங்களுக்கு ...' என்ற பொழுது அவள் விழிகள் மடைதிறந்து பெருகின.

அவள் இப்படியெல்லாம் நினைப்பாள், பேசுவாள் என்று அவன் நினைக்கவில்லை. அவள் தன்னையே தான் தாழ்த்திக் கொள்ளுமளவுக்கு பலவீன உணர்ச்சிகளை வளர்த்து வைத்துக்கொண்டுள்ளாள் என்று நினைத்த பொழுது அவன் இதயமே பிளந்துவிடும்போலிருந்தது. அவளுடைய இரு தோள்களையும் பற்றி இழுத்துக் கொண்டே, 'சித்திரா! என்னைப்பற்றியா இப்படியெல்லாம நினைத்தாய? என்றபொழுது அவனுக்கே கண்ணீர் வந்துவிட்டது.

'நான் அம்மாவோடு கதைத்துக்கொண்டு உள்ளே வாரேன். தெரியாததுபோல் நிற்கின்றீர்கள் நான் கண்ணைப் பொத்தினேன். ஏதாவது கேட்டீர்களா? இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?'

'அடிபேதையே! நான் விளையாட்டாக நடந்து கொண்டதை விபரீதமாக எண்ணிவிட்டாயே. 'சித்திரா சித்திரா' என்று வாய் குளிர,உள்ளம் குளிர அழைக்கின்றேனே இது நடிப்பா? என்னை நீ புரிந்துகொண்டது இவ்வளவுதானு? நான் உன்னை என் உடன் பிறவியாக நினைத்திருக்கையில் நீ என்னை ஓர் மனிதப் புழுவாக நினைத்துக்கொண்டிருக்கின்றயே.' என்ற பொழுது அவன் விழிகளில் நீர் பொலபொலவென உதிர்ந்தது. சித்திரா திகைத்துவிட்டாள்.

'அழாதீங்கண்ணு' என்று அவன் விழிகளைத் துடைத்துவிட்டாள்.

'என் விழிகளிலிருந்துபெருகும் நீரைத் துடைக்க மட்டும் உன்னல் முடிகின்றது. ஆனல் என் இதயத்தைக் கசக்கிப் பிழிந்திட்டியே!' என்று அவன் கூறியபொழுது அவன் இதயமே சுக்கு நூருக வெடித்துச் சிதறியது.

'போதும் அண்ணு போதும். நான் சிறியவள். தெரியாமல் சொல்லிவிட்டேன்' என்று அவனைக்கட்டி அணைத்துக்கொண்டு கதறினுள்.

'சித்திரா அழாதே.' என்று அவள் தலையை வருடியவன், 'சித்திரா! நீ என்னை வெறுத்தாலும் நான் உன்னை வெறுக்கமாட்டேன். என் படிப்பு, அந்தஸ்து உயரலாம். அந்தளவுக்கு உன்னிடம் நான் கொண்ட பாசமும் வளருமே தவிரக் குறையாதடி. நீ திடீரென என்னை மறந்து போனலும், இதுவரை காலமும் என்னேடு பழகிய அன்புச் சித்திராவை நான் மறந்துவிடமாட்டேன். சித்தரா! அன்று கேட்டாயே ராதாலட்சுமி பற்றி. அவள் என்னை விரும்புகின்றுள். அவளிடம் நான் வைத்துள்ள அன்பிலும் மேலாக உன்னிடம் அன்பு வைத்துள்ளேன். அன்பு அந்தஸ்துக் கேற்பத் தோன்றுவதல்ல. அது பண்பட்ட நிலத்தில் வளரும் பயிரைப் போன்றது. உடன் பிறந்த அண்ணனும் தங்கையும் தெருவிலே ஜோடியாகப் போனுலும் உண்மையுணராது கண்டபடி பழிதூற்றும் சந்தேக மனம் கொண்டது சமுதாயம். காரணம் உண்மைக்கு மேலே நாகரீகத்தூசி படிந்து சமுதாயத்தில் நல்ல கண்களையே உறுத்துமளவுக்குக் கெட்டுக் கிடக்கிறது உலகம். எமக்கிடையேயுள்ள இந்தக் கள்ளம் கபடமற்ற அன்புப் பிணைப்பை மற்றவர்கள் கண்டபடி கதைத்துவிடக் கூடாதேயென்று தான் நான் இப்படி நடந்துகொண்டேனேயொழிய வேறு காரணத்திலில்லையடி.' என்று அவன் கூறியபொழுது,

'அண்ணு நான் இப்படி அழுதிருக்காவிட்டால் இந்த அன்புள்ளத்தினை எப்படி அறிந்திருப்பேன்.' என்று அவள் கூறியபொழுது, அறை வாசலில் அவர்களைப் பார்த்துக்கொண்டு நின்ற உருவத்தைக் கண்டு இருவரும் திடுக்கிட்டனர்.

(வளரும்)

---

## நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

கதிர்காமம் ஸ்ரீ முத்துலிங்க சுவாமிகள் ஆலயத் திருப்பணி நிதிக்காக பொரலஸை வை. எம். பீ. ஏ. மண்டபத்தில் விரைவில் மேடையேற இருக்கும் லம்லம் புரடக்ஷன்சாரின் முதல் தயாரிப்பான பீ. எஸ் .ராஜனின் 'நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்' என்ற சமூக நாடகத்தின் ஆரம்ப விழா கோட்டாஞ்சேனை அரசினர் முஸ்லிம் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. நீண்ட இடைவெளிக்கு பின் தப்பிராஜா, இரா — வேல் முருகன், ஆகியோர் முக்கியபாகமேற்று நடிக்கும் இந்நாடகத்தில் நடிகைகள் கமலஸ்ரீ, குமாரீரஞ்சனியுடன்முன்னணிநகைச்சுவை நடிகர் பொஸ்கோவும்பங்கு பற்றுகிறார். இந்நாடகத்தின் கதை, வசனம், பாடல்கள், டைரக்ஷன், ஆகிய பொறுப்புகளை பி. எஸ் ராஜன் ஏற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இலங்கை அரசுக்கு ஓர் எச்சரிக்கை!

# சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் நிறுத்திவைக்கப்படவேண்டும்!

## உலகத்தமிழ் இளைஞர் பேரவை இந்திய அரசிடம் கோரிக்கை!

உலகத் தமிழ் இளைஞர் பேரவை கூட்டம் இரா. ஜனார்த்தனம் தலைமையில் 30-5-73 கூடி நிறைவேற்றிய தீர்மானம் வருமாறு:-

'இலங்கையின் கிழக்கு மாகாணமாகிய மட்டக்களப்பை அடுத்த காட்டுப் பகுதிகளில் இலங்கைக் குடியுரிமை பெற்ற இந்தியத் தமிழர்கள் குடியேறுவதைச் சட்டபூர்வமாகத் தடுக்க இலங்கை அரசு முடிவுசெய்துள்ளது.

'ஸ்ரீமாவோ — சாஸ்திரி' ஒப்பந்தப்படி பெரும் இடையூறுக்கிடையில் குடியுரிமை பெற்றுள்ள இந்தியத் தமிழர்களுக்கு, அரசின் தேயிலைத்தோட்டங்களை தேசியமயமாக்கும் கொள்கையாலும், தேயிலை ஏற்றுமதி வீழ்ச்சியாலும் சிங்களவர்களை புதிதாக தேயிலைத் தோட்டங்களில் வேலைக்கு நியமிப்பதாலும் வேலைவாய்ப்பிழந்துள்ளனர். தோட்டங்களில் வேலை பெற்ற தமிழர்களுக்கு வாரத்திற்கு மூன்றுநாள் வேலைதான் கிடைக்கிறது. படித்த தமிழ் இளைஞர்களுக்கு அரசாங்கம் மற்றும் பொது நிறுவனங்களில் 'சிங்களவருக்கே வேலை வாய்ப்பு, என்ற அரசாங்கக்கொள்கை காரணமாக வேலை கிடைப்பதில்லை, இந்நிலையில் வேறு வழியின்றி காடுகளைத் திருத்தி இக் குடியுரிமை பெற்ற தமிழர்கள் தற்போது விவசாயத்தில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.

'அரசாங்கம் காடுகளைத் திருத்தி மக்களைக் குடியேற்றும் திட்டத்தில் சிங்களவர்க்கே இடம் அளித்து வருகிறது. குறிப்பாக தமிழ் பகுதிகளில் இத்திட்டத்தின் மூலம் சிங்களவர்களைக் குடியேற்றி அப்பகுதிகளில் தமிழர்களைச் சிறுபான்மையினராக்கும் முயற்சியிலும் வெற்றி கண்டுள்ளது. அரசாங்கம் இடம் ஒதுக்காததால் தமிழர்கள் தாங்களாகவே, வாழவேறு வழியின்றிச் சில காட்டுப் பகுதிகளில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். இதையும் தடுக்கத் தற்போது இலங்கை அரசு திட்டமிடுகிறது.

'இந்நிலையில், இந்திய அரசு 'ஸ்ரீமாவோ—சாஸ்திரி ஒப்பந்தப்படி குடியுரிமை பெறும் இந்தியத் தமிழர்கள், சிங்களவர்களைப்போல் சம உரிமை பெறுகிறார்களா என்பதில் கவனம் செலுத்த வேண்டும். இலங்கை அரசு, குடியுரிமை பெற்றுள்ள தமிழர்களை சம உரிமையோடு நடத்தாததால் 'ஸ்ரீமாவோ—சாஸ்திரி' ஒப்பந்த அமுலை தற்காலிமாக நிறுத்திவைக்க வேண்டும்.

'இலங்கை அரசு மிகத் தந்திரமாக ஒப்பந்தபடி ஒரு பகுதி தமிழரை இந்தியாவிற்கு அனுப்புவதோடு, இலங்கைக் குடியுரிமை பெற்ற மறுபகுதி தமிழரை எவ்வகையிலும் வாழவிடாமல் நெருக்கடி மூலம் அவர்களாக இந்தியா திரும்பும் நிலைக்கு ஆளாக்கி வருகிறது. இந்திய அரசு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மனப்பூர்வமான அக்கறை காட்ட வேண்டும். அல்லது ஒதுங்கிக்கொள்ளவாவது வேண்டும். இலங்கை அரசு நியாயமாக அமுல் படுத்தாத ஒப்பந்தங்களை இந்திய அரசு ஏற்று செயல்படுத்தி இலங்கையில் உரிமைக்காகப் போராடும் 35லட்சம் தமிழர்களை தர்மசங்கடத்தில் ஆழ்த்தி வருகிறது.

'இலங்கைத் தமிழர்கள் இன்று ஓரணியாக, இரண்டில் ஒன்று என்ற முடிவிற்கு வந்துவிட்டனர். தமிழ் இளைஞர்கள், கல்வி, வேலை வாய்ப்பு, இழந்த நிலையில் தற்போது உரிமைக்காகப் போராடத்துணிந்துவிட்டனர். இலங்கை அரசின் தமிழ் விரோதப்போக்கு புதிய புதிய சட்டங்களால் நாளும் வளர்ந்து வளர்ந்து வருகிறது. இந்நிலையில் இலங்கை அரசுக்கு ஓர் எச்சரிக்கையாக 'ஸ்ரீமாவோ—சாஸ்திரி' ஒப்பந்த அமுலை தற்காலிகமாகவேனும் இந்திய அரசு நிறுத்திவைக்க வேண்டும் என்று பேரவை ஒருமனதாகக்கேட்டுக் கொள்கிறது;

---

## மாடப்புருக்களுக்கு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கி முனையில் துரத்தப்படப் போகின்றார்களாம்!

ஏனென்றால், இவர்கள் இலங்கைக் குடியுரிமை இல்லாத 'கள்ளத்தோணிகளாம்'! அதனால்தான், சமதர்மம் பேசுகின்றவர்கள், மனிதாபிமானம் பற்றிப் பேசுகின்றவர்கள், சகல சீவராசிகளிடத்தும் கருணை காட்டும்படி போதித்த புத்த பெருமானின் பக்தர்கள், ஆகிய அரசாங்கத்தினர் இம் மக்களைத் துரத்தி அடிக்கப் போகின்றார்களாம்!

இந்த மக்கள் 'கள்ளத் தோணிக'ளாக இருந்தால் தான் என்ன, காணி பூமியையும் கள்ளத்தனமாகத் தூக்கிக்கொண்டா போய் விடுவார்கள்?

இம் மக்களை அவர்கள் பாடுபட்டு வளமாக்கிய நிலங்களிலிருந்து துரத்தி அடிக்கப்போவதற்கு இன்னுமொரு காரணமும் சொல்லப்படுகின்றது. அதாவது; இவர்கள் உள்ளூர் மக்களுக்குக் கொடுப்பதற்கென்று ஒதுக்கி விடப்பட்ட இடங்களில் குடியேறி விட்டார்களாம். உள்ளூர் மக்களையும் தமிழர்களையும் முஸ்லீம் மக்களையும்தான் — மலைநாட்டுத் தமிழ் மக்களுடனும் முஸ்லீம் மக்களுடனும் சிண்டுமுடித்து விடப் பார்க்கிறார்கள்! உள்ளூர் மக்களுக்கு இது வரையும் கொடுக்கவில்லை; ஆனால் கொடுக்கவென்று இருந்தார்களாம்! ஆடு நனையுதென்று ஓநாய் அழுத கதைதான்!

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் அண்மையில் இங்கு வந்து இந்நாட்டு அரசாங்கத்துடன் இந்திய வம்சாவளிப் பிரஜைகள் சம்பந்தமாகவும் பேச்சு வார்த்தை நடத்தி விட்டுப் போயிருக்கிறார்கள்.

ஆனபடியால், அவர் இந்த அரசாங்கத்துக்குச் சொல்லிவைக்கவேண்டியது அதாவது:-

'இலங்கையிலிருக்கும் இந்திய வம்சாவளிப் பிரஜைகள், அவர்களுக்கு பிரஜா உரிமை கிடைத்ததோ சரி, கிடைக்குமோ சரி, அல்லது கிடைக்காமல்தான் போகுமோ சரி, அவர்கள் இங்குஇருக்குமட்டும் அவர்களை மனிதர்களாகப் பாவியுங்கள், மனிதர்களுக்குரிய உரிமைகளோடு வாழவிடுங்கள்' என்பதைத்தெளிவாகச்சொல்லி வைக்கவேண்டும்.

அப்படிச் சொல்வதற்கு திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கு முடியாதுவிட்டாலோ விருப்பம் இல்லாது விட்டாலோ இங்குள்ள இந்திய வம்சாவளிப் பிரஜைகளையிட்டு இந்த அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்துவதிலோ, அர்த்தமும் இல்லை; பயனுமில்லை.

ஒரு நாட்டிலே வாழும் ஒரு மனிதனுக்கு — அவன் அந்த நாட்டுப் பிரஜையாக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும்சரி — எந்த உரிமைகள் மறுக்கப்பட்டாலும், அவன் தன் பசியைப் போக்கிக்கொள்வதற்கு கடவுள் படைத்துவிட்ட நிலத்தை — யாரும் பயிரிட்டுப் பயன்படுத்தாத தரிசு நிலத்தை—அவன் பயிரிட்டுத் தன் பசியைப் போக்கிக்கொள்ள முனைவதை யாரும் தடுக்கக் கூடாது. அப்படித் தடுப்பது படுபாதகம். தடுப்பதற்கு எவருக்கும் உரிமையும் இல்லை. பசியைப் படைத்த கடவுள்தான் நிலத்தையும் படைத்திருக்கிறான். நீரையும் படைத்திருக்கிறான், அவற்றைப் பயன்படுத்தி மனிதன் தன் பசியைப்போக்கிக்கொள்ளும் பொருட்டு இந்த உரிமையை ஒருவனுக்கு மறுப்பதற்கு இன்னொருவனுக்கு என்ன உரிமை இருக்கின்றது? அந்த உரிமையை மறுப்பவன், அப்படி மறுக்கப்படுபவனுக்குப் பசியும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டுமே! அது முடியுமா?

—அருள்

---

## ஒரு மனிதன் இரு உலகம்

பதினாறுபெண்களைவைத்து இலங்கை தேசிய கலா நிலையம் மேடையேற்றிய ஒரு மனிதன் இரு உலகம் 'நாடகம் அப்போது தமிழிலும் சிங்களத்திலும் திரைப்படமாகத்தயாராகிறது. திரைப்படத்தில் சிங்கள சினிமாவின் முன்னணி நட்சத்திரம் சோனியாதிசாவுடன் தமிழ் மேடை நடிகர் டீன்குமார்—ஒஸ்வால்ட் ஜயசிங்வர ஆகியோர் நடிக்கிறார்கள்.

ஏராளமான ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க இந் நாடகம் இம்மாதம் 17ந் திகதி கொழும்பு லயனல் வென்ட் தியேட்டரிலும், 23ந் திகதி பருத்தித்துறை காசில் சினிமாவிலும், 24ந் திகதி யாழ் — வீரசிங்கம் மண்டபத்திலும் மேடையேறுகிறது. கதை-வசனம்-டைரக்ஷன் கலைச்செல்வன் ஏற்றுள்ளார்.

---

## பழம்பெரும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையிலே குடியரசு நாளைத் தமிழ்ப் பகுதிகள் அனைத்தும் துக்க தினமாக அனுட்டித்தும் அன்று, இவரது காரியாலய மதில்களில் எல்லாம், அரசுக்கு எதிராக சுலோகங்கள் எழுதப்பட்டிருந்தது. அதை இராணுவ அதிகாரி அகற்றும் படி தலைவருக்குக் கட்டளையிட்ட போது, அவர், அது தம்மால் முடியாதெனவும், அதற்காகத் தம்மைக் கைது செய்தாற் கூடத்தான் அஞ்சப்போவதில்லையெனவும் உறுதியுடன் கூறியவர்.

மறைந்ததொண்டரின் சடலத்தை வவுனியா பா. உ. திரு. சே. மா. செல்லத்தம்பு தமிழரசுக் கட்சியின் மூவண்ணக்கொடியினால் மூடித் தமது இறுதி அஞ்சலியைச்செலுத்தினார். இறுதி யாத்திரையில் திரு. செல்லத்தம்பு, ஜி. பி. வின்சென்ட் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

அவரது மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து கறுப்புக் கொடிகளும் ஆங்காங்கே பறக்க விடப்பட்டிருந்தன. உதயசூரியன் கொடி அரைக் கம்பத்தில் தாழப் பறந்தது.

திரு. அரியகுட்டியின் மறைவு தமிழரசு இயக்கத்திற்கும், முள்ளியவளை மக்களுக்கும் ஓர் பேரிழப்பாகும் என்று திரு. செல்லத்தம்பு தெரிவித்தார்.

---

## தமிழர்...

(1.ம் பக்கத் தொடர்ச்சி)

● வடக்கில் மக்கள் வாழ முடியாத அளவுக்கு வன்முறைகள் நடப்பதாக திட்டமிட்ட பொய்ப்பிரச்சாரத்தை தொடர்ந்து நடத்துவது.

● கிராம சபைத்தலைவர் ஒருவரின் கொலையுடன் தமிழரசுக்கட்சியையும் பிணைத்து தேசிய பேரவையில் துணை அமைச்சர் ஒருவர் பகிரங்கமாகப் பேசியது.

● சட்டத்துக்குட்பட்டு, தமிழர் கூட்டணி ஆதரவாளர்கள் வெளியிடும் பிரசுரங்களையெல்லாம் 'நாசகாரப் பிரசுரங்கள்' என்று பெயர்சூட்டி கைப்பற்றிவருவது. (சுதந்திரனில் கடந்த ஆண்டு வெளிவந்த சில கட்டுரைகளின் தொகுப்பு 'மே 22' என்ற பெயரில் தமிழர் கூட்டணி ஆதரவாளர் ஒருவரால் வெளியிடப்பட்டதும் அதை 'நாசகாரப்பிரசுரம்' என்று பெயரிட்டு ஆட்சியாளர்கள் கைப்பற்றி வெளியிட்டவரை கைது செய்து வைத்திருப்பதும் தெரிந்ததே.)

இப்படியெல்லாம் தமிழர் கூட்டணியை ஒரு வன்முறை இயக்கம் என்று சித்திரித்துக்காட்டும் முயற்சியில் அரசாங்கமும் அரசாங்கத்தின் கைப்பொம்மைகளான நாளேடுகளும் இறங்கியிருப்பதன் பின்னணி சதி நோக்கம் காலகதியில் 'தமிழர் கூட்டணியை' தடைசெய்வதேயென்று அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

---


## அறிவித்தல்

### அளவெட்டி, வடக்கு கூத்தஞ்சீமா
### திருமதி மகேசுவரி யோகீசுவரன்

காலஞ்சென்ற திரு. ச. செல்லையா, திருமதி செ.இளைய பிள்ளை ஆகியோரின் இளைய மகளும், மைதிலி, வாசுகி, மழலை, கபிலை ஆகியோரின் தாயாரும் சமகால உரைபெயர்ப்பாளர் செ. குமாரசாமியின் தங்கையுமான திருமதி யோ. மகேசுவரியின் மோட்சதீப வைபவம் 16.6.73 வெள்ளிக்கிழமை அளவெட்டியில் நடைபெற்றது.



"தொக்க பிணிபோலத் தோன்றும் பகையில்லை
மிக்க கல்வி போலுறவு வேறில்லை — மக்களைப்
போல் வாய்ந்த பெருநட்பு மற்றில்லை தெய்வம்
போல் ஏய்ந்த பெரும் பெலமும் இன்று."

—சாணக்கிய நீதி வெண்பா.

மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகளை சேகரித்து அனுப்பி அறிவு நூல்களை வாங்கிப் படியுங்கள்:

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**

**த: பெ. இல. — 77, யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைவாசி உயர்வால் வேதனையோ வேதனை!

## 'சமதர்ம' ஆட்சியாளரின் சாதனையோ சாதனை!

வாழ்க்கைச்செலவு அதிகரித்துக்கொண்டே போகிறது. இரவோடிரவாக முக்கிய உணவுப் பொருட்களின் விலைகள் உயர்த்தப்பட்டுவருகின்றன. இப்பவோ, பின்னையோ, மத்தியானத்திலோ, நள்ளிரவோ அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை அதிகரிக்கலாம். ஒவ்வொரு வர்த்தகரும் வானொலியையும், பத்திரிகைகளையும் எதிர்நோக்கி விலை உயர்வுகளை அவதானித்துவருகிறார்கள்.

வாழ்க்கைச் செலவு உயர்ந்து சில வருடங்களின் முன்பிருந்த விலையைவிட மும்மடங்கு உயர்ந்துவிட்டது. இதனால் தொழிலாளர்கள், நடுத்தர வகுப்பார் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். சம்பள முரண்பாட்டுக்கமிஷன், அறிக்கை சமர்ப்பித்து 4½ ஆண்டுகளாகின்றன. நான்கு இலட்சம் பொது ஊழியர்கள் அந்தச் சம்பள முரண்

**ந. சிவபாதம்**

பாட்டுக் கமிஷன் அறிக்கையை அமுல் நடாத்தும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர். இன்னும்தான் சம்பள கமிஷன் அறிக்கை அமுல் நடத்தப் படவில்லை.

வாழ்க்கைச் செலவுப் புள்ளி 1968ம் ஆண்டில் 120 ஆக இருந்தபோது சம்பள உயர்வு அவசியமாகக் காணப்பட்டது. இன்று வாழ்க்கைச் செலவுப்புள்ளி 159 ஆக உயர்ந்துவிட்டது. இந்த உயர்ச்சியைக் கொண்டு சம்பளம் கூட்ட வேண்டியது எத்தகைய அவசியமாகின்றது?

இன்று அன்றாட பாவனைப் பொருட்களின் விலை எவ்வாறு உயர்ந்திருக்கின்றதென்பதைப் பார்ப்போம்:

| | 1968 | 1973 |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| மாவு இருத்தல் | 25 | 57 |
| சீனி இருத்தல் | 58 | 1.65 |
| அரிசி 1 கொத்து (கூப்பனுக்கு) | 25 | 1.40 |
| அரிசி 1 கொத்து (கடைகளில்) | 1.00 | 2.60 |
| தீப்பெட்டி | 3 | 8 |
| சன் லைட் | 35 | 48 |
| நெஸ்ப்ரே 1 ருத். | 2.90 | (லக்ஸ்பிரே) 4.75 |
| உப்பு 1 கொத்து | 15 | 45 |
| மண்எண்ணெய் 1 கலன் | 96 | 1.56 |
| தே. எண்ணெய் 1 போ. | 75 | 2.40 |
| வெங்காயம் ருத்தல் | 31 | 2.25 |
| தேங்காய் ஒன்று | 15 | 40 |
| கத்தரிக்காய் ருத்தல் | 20 | 90 |
| பச்சை மிளகாய் ருத். | 25 | 1.50 |
| உரு. கிழங்கு இருத். | 25 | 1.40 |
| செத். மிளகாய் ருத். | 1.60 | 9.60 |
| பயறு இருத்தல் | 1.20 | 6.00 |
| **சமையலறைப் பாவனைப் பொருட்களின் விலை** | **1968** | **1973** |
| | ரூ. ச. | ரூ. ச. |
| 1 அலுமினியப் பானை | 2.50 | 8.50 |
| 1 தே வடி. | 20 | 1.25 |
| 1 அரிக்கன் | 1.00 | 5.50 |
| 1 அரிக்கன் லாம்பு | 6.00 | 45.00 |
| 1 டபிள் குக்கர் | 80.00 | 250.00 |
| **உடு பிடவைகள்** | | |
| 1 வேட்டி | 6.00 | 25.00 |
| 1 சிறுவர் சட்டை | 5.00 | 20.00 |
| 1 நூல் சாரி | 12.00 | 30 00 |
| 1 சேட் | 10.00 | 35 00 |
| 1 பெனியன் | 75 | 3.25 |
| **மாணவருக்கானவை** | | |
| 1 கொப்பி | 12 | 25 |
| 1 குயிங் இங்க் | 75 | 1.80 |
| 1 சிலேற் | 30 | 1.50 |
| 1 டசின் புல்ஸ்காப் | 20 | 90 |
| 1 சிலேற் பென்சில் | 2 | 10 |
| 1 லெட் பென்சில் | 8 | 25 |
| **கால் நடைகளுக்கானவை** | | |
| 1 இருத்தல் பிண்ணாக்கு | 12 | 55 |
| 1 கொத்து தவிடு | 6 | 28 |
| **பொது உபயோகப் பொருட்கள்** | | |
| 1 கட்டு பீடி | 22 | 80 |
| 1 கட்டு சுருட்டு | 20 | 85 |
| 1 பை. நெவிகெட் | 1.00 | 2.00 |
| **சாப்பாட்டுக் கடைகளில்** | | |
| 1 இடியப்பம் | 3 | 7 |
| 1 பிட்டு | 5 | 25 |
| 1 பிளேன் ரீ | 5 | 15 |
| 1 வடை | 5 | 15 |
| 1 இருத்தல் பாண் | 24 | 50 |
| 1 சாப்பாடு | 75 | 2.00 |

1970 மே திங்களில் இன்றைய அரசாங்கம் பதவி ஏற்கும்பொழுது இருந்த விலைகளைவிட இன்று ஒன்றுக்கு மூன்று, நான்கு மடங்கு விலைவாசிகள் உயர்ந்துவிட்டன.

சம்பளக்கமிஷன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோது — எல்லா அரச ஊழியர்களுக்கும் ஒருகுறிப்பிட்ட தொகை தற்காலிக உயர்வாகக் கொடுக்கப்பட்டது. ஆனால் இன்றோ அந்த நேரத்தில் பாவனைப் பொருட்களின் விலைக்கும் இப்போதிருக்கும் விலைக்கும் பெருமளவு வித்தியாசமேற்பட்டிருக்கின்றது. உணவுப் பொருள்களின் விலைகளைக் கவனிப்போம்.

தமது வேலைக்குச் செல்ல இலகுவான வாகனமாகவும், எல்லாரும் எளிதில் வாங்கக் கூடியதுமான பைசிக்கிள் இப்போ ரூ. 1,200 ஆக விற்கப்படுகின்றது. வாடகைக் கார் கட்டணமும் மைலுக்கு 50 சதமாக இருந்து இப்போ ரூ. 1/50 சதமாக அறவிடப்படுகின்றது. பஸ் கட்டணங்கள், புகையிரதக் கட்டணங்கள், தபாற் கட்டணங்கள் அனைத்தும் அதிகரித்துள்ளன.

1967ல் தற்காலிகமாகச் சம்பளம் கூட்டப்பட்டபின் இதுவரை சம்பளமேதுவும் கூட்டப்படாததையும் இன்று விலைவாசி ஏற்றத்தையும் அரசாங்கம் புனராலோசனை செய்து பார்க்க வேண்டும். மாதம் ரூபா 225/= சம்பளம் பெறும் ஒரு ஆசிரியர் தனது மனைவி மூன்று பிள்ளைகளுடன் வாழ்வதென்றால் அவர் நிச்சயம் கடன் பட்டே சீவிக்க வேண்டும். இதனைத் தொழிற்சங்கங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

விஷம் போல் ஏறி வரும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க அரச ஊழியர்கள் அனைவருக்கும் சம்பளங்கள் உயர்த்தப்பட வேண்டும். அல்லது தற்காலிக படியாயினும் உடனடியாகக் கொடுக்கப்படவேண்டும்.

தோட்ட தொழிலாளர்களும் 1965ம் ஆண்டுபெற்ற கூலியையே இன்றும் பெறுகிறார்கள். அவர்களுக்குத் தோட்டங்களில் கிழமைக்கு இரு நாட்களே வேலை கொடுக்கப்படுகின்றது. இதனை வைத்துக் கொண்டு அவர்கள் தமது வாழ்க்கையைச் செம்மையாக்க முடியுமென்று அரசாங்கம் நம்புகின்றதா?

இன்றைய நிலையைத் தொழிற் சங்கங்கள் சிந்தித்து முடிவு காண முன்வரவேண்டும்.

## தமிழ் விடுதலை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கண்டே உணர்ச்சியில்லாதவர்கள் கூடச் சுதந்திர வேட்கைகொண்டு போராடினர்கள். மகாத்மா காந்தியும், ஏனைய தலைவர்களும் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று பிரச்சாரம் செய்தார்கள்— நிலைமையை மக்களிடம் தெளிவுற விளக்கினர்கள்; இந்தியச் சுதந்திரத்தின் போது தொண்டர்கள் ஊர் ஊராக சென்று சுதந்திரவேட்கையூட்டும் நாடகங்கள் போட்டார்கள்; தெருத் தெருவாகச் சென்று உணர்ச்சியூட்டும் பாடல்கள் பாடி மக்களின் உணர்ச்சியைத் தட்டியெழுப்பினர்கள். இதுதான் அவர்களின் முழு வெற்றிக்குக் காரணமாகும்.

ஆனல், எமது தலைவர்களின் பிரச்சாரம் போதாதிருந்த இடத்தில் போராட்டத்தைப்பற்றிப் பேசினல் போதுமா? இவர்களின் நத்தைவேகம் உணர்ச்சியுள்ளவர்களையும், உணர்ச்சியில்லாதவர்களாக்கிவிடும்! தமிழ்த்தலைவர்கள் மூலை முடுக்குகள்—சந்து பொந்துகளுக்கெல்லாம் சென்றுகூட்டங்கள் போட்டு மக்களுக்கு எமது நிலையை நன்கு விளக்க வேண்டும். எமது தலைவர்களிடம் நான் மீண்டும் மீண்டும் பணிந்து கேட்பது இதுதான்—ஒரே இடத்திலேயே அடைந்து கிடக்காதீர்கள்; வெளியே வாருங்கள்: உங்களை மதித்து, உங்கள் கட்டளைகளை நிறைவேற்றத் தயாராக இருக்கின்றது பெரும்படை!

### கிழக்கு மாகாணம் உணர்ச்சியின் உறைவிடம்

வடக்கு மாகாணத்திலுள்ளவர்களைவிடக் கிழக்கு மாகாணத்தவர்கள்தான் உணர்ச்சிநிறைந்தவர்கள். ராஜன் செல்வநாயகம் கூட்டத்தாரின் பிரிவினைக் கூச்சலை ஆமோதிப்பது போலக் கிழக்கு மாகாணத் தமிழர் கூட்டணித்தலைவர்கள்மௌனமாக இருப்பது ஏனே? இவர்களின் மௌனத்தால் கிழக்கு மாகாணத் தமிழர்களின் உரிமை வேட்கை அவம் போகின்றது. நான் வடமாகாணத்தவளாயிருந்த போதிலும், கிழக்கு மாகாணத்தவரின் மொழிப்பற்றை நன்கறிந்தவள், எனவேதான் வேதனைப்படுகின்றேன்—அவர்களின் உணர்ச்சியைப் பயன்படுத்தாமல் அங்குள்ள எமது தலைவர்கள் காலத்தை வீணே கழிக்கிறார்கள் என்று.

தமிழ் இளைஞர் பேரவையும் வேகமாக இயங்கவில்லையே! இவர்களின் இயக்கமும் தொடர்ந்து எதிர்ப்புக் குரல் எழுப்ப வேண்டும். உணர்ச்சியில்லாத— வெறும் சேஷ்க்கைகளில் மட்டும் நாட்டமுள்ள இளைஞர்களும் சேர்ந்து கொண்டு தமிழ்த் தொண்டு புரியுமளவுக்கு இவ்வியக்கம் வளர வேண்டும்.

### பெண்கள் பங்கு

உரிமைப்போரில் பெண்களும் முக்கிய பங்கு பெற வேண்டும். தமிழுரிமை வேட்கை கொண்ட பெண்கள் பலர் ஆங்காங்கே 'இலைமறை'வாக இருக்கிறர்கள். இவர்களெல்லாம் வெளிவர வேண்டும். பெண்களின் துணிச்சலான செய்கைகள் ஆண்களுக்கு மேலும் உற்சாகத்தையூட்டும். பெண்கள் நினைத்தால் கோழையையும் வீரனுக்கலாம். எத்தனையோ பெண்கள் தமிழுக்காக சிறைபுகவோ, உயிரை விடவோ—எவ்விதத் தியாகத்தையும் செய்யக்காத்திருக்கின்றனர் நம்மிடையே. ஈழம் வாழும் தமிழரெல்லாம் அழிந்துபோகும் நிலை வந்தாற் கூடப்பரவாயில்லை.

எமது உரிமைப்போராட்டம், வெற்றி கிட்டி எமது இலட்சியம் நிறைவேறு மட்டும் தொடர்ந்து நடைபெற வேண்டும். மானம் அழிந்து அடிமை வாழ்வு வாழ்வதை விட இறப்பது மேலல்லவா? உயிர் எமக்கென்ன கரும்பா வெல்லமா? என்றாவது ஒரு நாள் அழிவதுதானே இந்தப் பாழும் உயிர்! அது இப்படிப் போனலென்ன? அப்படிப் போனலென்ன? இலட்சியத்துக்காக இறப்பதைவிடமேலான இன்பமுண்டோ?

நாமும் விடாது தொடர்ந்து போராடுவோம். தமிழ்த்தலைவர்கள் உற்சாகத்துடன் வழி நடாத்தட்டும். கட்டளைக்காக ஏங்கிக் காத்திருக்கின்றது தமிழ் இளைஞர் கூட்டம்! உரிமையுடன் வாழ்வோம்—இந்நம்பிக்கை ஈடேறும்வரை அயராது உழைப்போம். வெற்றி நமக்கே!

— ''மலரரசி''

## சுதந்திர எழுத்தாளர் பேரவை உதயமாகிறது

மலையகத்தில் வாழும் சுதந்திர எழுத்தாளர்கள் அனைவரும் ஒருங்கு சேர்ந்து சுதந்திர எழுத்தாளர்கள் பேரவை ஒன்றினை அமைத்திடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

பேரவை அமைப்புக்குழு விடுத்துள்ள அறிக்கை குறிப்பிடுவதாவது:-

சுதந்திர எழுத்தாளர் பேரவை மக்களின் சுதந்திர ஆர்வங்களுக்கும், ஆற்றல்களுக்கும் புதுமைப் புரட்சிக் கருத்துக்களுக்கும் இடமளிப்பதாக விளங்கும்.

சந்தர்ப்பவாதிகளின் அரசியல் கொள்கைகளுக்குள் மட்டும் இலக்கிய வட்டங்களை உருவாக்கியும் மன்றங்களை அமைத்தும் சுதந்திரச் சிந்தனையைத் தடுக்கும் கும்பல்களிடமிருந்து மலையக எழுத்தாளர்களையும் ஏனைய பிரதேச எழுத்தாளர்களையும் விழித்தெழச்செய்வதில் சுதந்திர எழுத்தாளர் பேரவை ஈடுபடும்."

இன்றைய அரசியல் சூழ்நிலையில் மலையக மக்களின் மண்ணுரிமைக்குக் குந்தகம் விளைவிக்கும் சட்டதிட்டங்களை சுதந்திர எழுத்தாளர் பேரவை வன்மையாகக் கண்டிப்பதுடன் மலையக மக்களின் மண்ணுரிமைக்காகவும் போராடும்.

இப்பேரவை தனிமனித சுதந்திரம், அரசியல் சுதந்திரம், பொருளாதார சுதந்திரம் ஆகியவற்றினுக்காகவும், இனம், மொழி, சமூகம், கலை, கலாச்சார உயர்வுக்காகவும், தனித்துவத்தைக் கட்டிக்காப்பதற்காகவும் எழுத்தாளர்களின் படைப்புக்களுக்கு ஊக்கமளிப்பதில் ஈடுபடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழைகளின் வயிற்றில் அடிக்கிறீர்கள் இதுதானு நீங்கள் கூறும் சோசலிசம்?

## தேசிய பேரவையில் ஆட்சியாளர்களுக்கு உடுப்பிட்டி ஜெயக்கொடி சாட்டை!



"இந்நாட்டின்சாதாரண ஒருபிரஜையால் இன்று வாழ முடியவில்லை. தேநீர் விலை மட்டுமன்றி, சோறு, பாண், ஆகிய அனைத்துமே இன்று விலை அதிகரித்து விட்டன. சோஷலிசம் என்று வாயால் மட்டும் பேசிக்கொண்டு மக்களின் வயிற்றில் அடிக்காதீர்'' இவ்வாறு திரு. கே. ஜெயக்கொடி பா. உ. தேசியப்பேரவையில்பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்.

பால்மா விலை அதிகரிப்பு சம்பந்தமாக எதிர்க்கட்சியினரால் கொண்டுவரப்பட்ட பிரேரணையின் மீது உடுப்பிட்டி பா. உ. திரு.கே. ஜெயக்கொடிமேலும்பேசியதாவது—

ஒரு கண்ணுடி வீட்டுச் சண்டைபற்றி உதவி அமைச்சர் திரு. நவரத்தின இங்கு குறிப்பிட்டார். ஐக்கியதேசியக்கட்சி பிழைவிட்டதால் தான் அதனை மக்கள் நிராகரித்தனர். ஆனல் அதே பிழையைத் தான் நாங்களும் விடுவோம் என நீங்கள் கூறியிருந்தால் மக்கள் உங்களை இங்கு அனுப்பியிருக்கமாட்டார்கள்.

போட்டா போட்டியாக நீங்கள் இரு ஆட்சியினரும் இப்படி நடந்தால் மக்கள் என்ன செய்வது? பாலை எங்கு வாங்குவது?

இந்தியாவில் இரு ரயில்கள் மோதியதால் அதன் அமைச்சர் உடனே பதவியிலிருந்து விலகினர். ஆனல் இங்கு எங்காவது ஒரு பிழை நடந்தால் அதன் இலாகா மீதோ தலைவர் மீதோ குற்றம் சாட்டி சும்மா இருந்து விடப்பார்க்கிறர்கள். இதனல் பாலின் விலையைக் குறைக்க முடியாது மக்களின் நாளாந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. ஒருவர் குற்றம் காண்பதால் பாலின் விலையைக் குறைக்க முடியுமா?

பாலும், லக்ஸ்பிறேயும் அதிகமாக இந்நாட்டின் சிறு பிள்ளைகளுக்குத் தான் தேவை. ஆதலால் லக்ஸ் பிரேக்கு பீக்ஸ் இல்லாமல் செய்து விலையைக் குறைக்கலாம். குழந்தைகளுக்குப் போஷாக்குச் சக்தி அவசியம் டாக்டர்களே இதனைக் கூறுகின்றர்கள். இலங்கையின் எதிர்கால வளம் கருதி, அவர்களைப் பலசாலிகளாக்குவதற்கு போதிய பால்மா வேண்டும்.

அவசரகாலச்சட்டம் இன்று இல்லா திருந்தால் அரிசி, மா, சீனி விலையைக் கூட்டும்போது மக்கள்சும்மா இருந்திருக்க மாட்டார்கள். முன்னர் 25 சத அரிசி 70 சதமாக உயர்த்தப்பட்டபோது மக்கள் ஏற்படுத்திய ஆர்ப்பாட்டத்தால் அப்போதைய பிரதமர் பதவி துறக்க நேர்ந்தது.

ஆனல் இன்று அவசரகாலச் சட்டத்தை உங்களுக்கு ஆதரவாக வைத்துக் கொண்டு அத்தியாவசியப் பொருட்களின் விலையை அதிகரிக்கின்றீர்கள். தொழிற்சாலைகளுக்கு கூட்டுத்தாபனங்களுக்கு இப்போது திறமைசாலிகள் நியமிக்கப்படுவதில்லை. அவர்கள் திறமைக்கு இடமில்லை. அரசியல் வாதிகளின் கையாட்கள் தான் இப்பதவியைப் பெறுகின்றர்கள்.

"எலிபன்ட் ஹவுஸ் பால் 1 ரூபா 30 சதமாக விற்கப்படுகின்றது. நாங்கள் 90 சதமாகத்தான் விற்கின்றேம்." என்று காணி விவசாய உதவி அமைச்சர் கூறினர். ஆனல் கிராமப்பகுதியில் 30,40 சதமாகவே விற்கப்படுகின்றது. எலிபன்ட் ஹவுஸ் பால் அப்படி விற்கின்றது. நாங்கள் ஏன் விலையைக் கூட்டக் கூடாது என்று ஏட்டிக்குப் போட்டியாகக் கூட்டக் கூடாது. இதனல் ஏழை மக்கள் மேலும் கஷ்டமடைகின்றர்கள். இதனல் அவர்கள் கடைசியில் களைப்புக்குத் தேநீர் கூடக் குடிக்க முடியாதிருக்கின்றது. அது மட்டுமா? சோறு விலை கூடியுள்ளது. எதுதான் குறைவாக இருக்கின்றது.

"மக்களுக்குச் சீனி மிகவும் அத்தியாவசியமானது— அது ஏழைகளுக்குமிக அவசியமானது" என்று ஒரு தடவை காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்காவே இச்சபையில் கூறியுள்ளார். ஆனல் அவர் கருத்துக்களுக்குச் செவிசாய்ப்பதாகக் கூறிக் கொண்டு அவரின் எண்ணங்களை செயல்படுத்துகின்றீர்களில்லை. முக்கியமாக குசினிச் சாமான்களின் விலையைக் குறையுங்கள். ஏழை மக்களையும் வாழவிடுங்கள். வாயால் மட்டும் சோஷலிஸம் பேசாதீர்கள்."

---

# கச்சதீவை விட்டுக் கொடுத்தால் சீனுவினல் ஆபத்து ஏற்படும்!

## இந்திய நாடாளுமன்றத்தில் தி.மு.க. எம்.பி. எச்சரிக்கை!

'அண்மையில் நமது பிரதமர் அவர்கள் இலங்கைக்குச் சென்றிருந்த போது அந்த நாட்டிலிருந்து இங்கே வெளியேற்றி அனுப்பப்படவிருக்கும் இந்திய வழி வந்த மக்கள் பற்றி விரிவாகப் பேசியதாகத் தெரிகிறது. கச்சதிவு பற்றியும் அவர் பேசி உள்ளார்.

கச்சதிவு பற்றி என் கருத்தைக் கூற விரும்புகிறேன்.

கச்சதீவு தமிழ் நாட்டின் ஒரு பகுதி. தமிழ் நாடோ இந்திய யூனியனின் ஒரு பகுதி. ஆக கச்சதீவு இந்தியாவைச் சேர்ந்த பகுதி.

கச்சதிவு இந்தியாவைச் சேர்ந்தது என்பதை நிருபிக்க தமிழக அரசிடம் அதிகார பூர்வமான சான்றுப் பத்திரங்கள் உள்ளன. முன்பு கச்சத்திவு ராமநாதபுரம் ஜமீன் பகுதியைச் சேர்ந்திருந்தது. அப்போது ராமநாதபுரம் மன்னர் கச்சத்தீவில் நிலவரி வசூல் செய்து வந்தார்.

இரண்டாண்டுகளுக்கு முன்னர் தமிழக சட்ட மன்றத்தில் அப்போதைய சுதந்திராக் கட்சித் தலைவர் இது தொடர்பில் அதிகார பூர்வமான சான்றுப் பத்திரங்களை அளித்தார். கச்சத்தீவு தமிழ் நாட்டுக்குச் சொந்தமானது என்பதை இந்தப் பத்திரங்கள் திட்டவட்டமாகக் காட்டுகின்றன.

இப்படி சான்றுப் பத்திரங்கள் அளித்த சுதந்திராக் கட்சித் தலைவர் யாரென்று அறிந்தால் நீங்கள் வியப்படைவீர்கள். இன்று இந்திரா காங்கிரஸ் சார்பில் திண்டுக்கல் நாடாளுமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் சினமச்சாமிதான் இந்த சுதந்திரா தலைவர்.

கச்சதீவை இலங்கைக்கு அளிக்க பிரதமர் இந்திரா காந்தி இலங்கைப் பிரதமருடன் ரகசிய ஒப்பந்தம் ஏதேனும் செய்திருப்பாரோ என்ற அச்சம் ஏற்படுகிறது. கச்சத் தீவு ஒரு இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடமல்ல. அது வெறும் பாறைதான்' என்று பிரதமர் இந்திரா காந்தி தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

சீனர்கள் அச்சாய்சின் பகுதியில் உரிமை கொண்டாடிய போது பிரதமர் இந்திரா காந்தியின் தந்தையாரான அப்போதைய பிரதமர் "புல் முளைக்காத பொட்டல்காடாக இருந்தாலும் சரி, ஒரு அங்குல இடத்தைக் கூட வெளி நாட்டார்க்கு நாம் விட்டுக் கொடுக்க மாட்டோம்" என்று வலியுறுத்திச் சொன்னர். அப்போது தியாகி அவர்கள் கேலியாகக் கூட ஒன்றைச் சொன்னர்: என் தலையில் ஒரு உரோமம் கூட இல்லை. அதற்காக வேறு யாராவது அதைக் கேட்பார்களோ' என்பது அவர் அப்போது சொன்னது.

மேற்கு வங்காளத்தில் அந்த மாநில அரசைக் கேட்காமலே பெருவாரியை பாகிஸ்தானிடம் கொடுத்தார்கள். ஆனல் கச்சத்தீவு விஷயத்தில் அது தமிழ் நாட்டிற்குச் சொந்தமானது என்பதை நிருபிக்க தமிழ் நாடு அரசிடம் சான்றுப் பத்திரங்கள் உள்ளன.

எனவே கச்சத்தீவு பற்றி பிரதமர் இந்திரா காந்தி முதலில் தமிழ் நாடு அரசுடன் கலந்தாலோசனை புரிபவர் என்பது பற்றியும் அதன் பிறகு வலிமை வாய்ந்த நிலையில் இலங்கை அரசுடன் இது பற்றி அவர் பேசுவார் என்பது பற்றியும் இந்த நாட்டு மக்களுக்கு பிரதமர் உறுதியளிக்க வேண்டும்.

இந்த நாட்டின் தென் முனையில் உள்ள கன்னியாகுமரி பற்றி நீங்கள் அறிவீர்கள். ஒரு காலத்தில் அங்குள்ள பாறையில் அமர்ந்து விவேகானந்தர் இந்தியாவின் எதிர்காலம் பற்றி தவம் இயற்றியதாகக் கூறப்படும் இடத்தில் இன்று விவேகாநந்தரின் உருவச்சிலையையே அமைத்துள்ளோம்.

ஆனல் கச்சதீவு இலங்கைக்கு அளிக்கப்படுமானல் அங்கே சீனக்காரன் ஒருவனின் சிலைதான் நிறுவுவார்கள். அதன் பிறகு இந்நாட்டின் வடக்கிலும் சீனன் தெற்கிலும் சீனன் என்ற நிலைமையே ஏற்படும். அதன் விளைவாக நம் நாட்டின் பாதுகாப்பிற்கு இயல்பாகவே ஊறு ஏற்படும்.

எனவே கச்சதீவுபற்றி பிரதமர் இலங்கை அரசுடன் பேசுமுன் தமிழக அரசாங்கத்துடன் கலந்தாலோசனை புரிய வேண்டும். அதன் பிறகு திட்டவட்டமான முடிவு மேற்கொள்ள வேண்டும் என்ற வகையிலும், கச்சத்தீவை இலங்கை அரசிடம் அளிக்கக்கூடாது.

—இவ்வாறு அண்மையில் டெல்லிப்பாராளுமன்றத்தில் பேசிய தி. மு. க. வைச் சேர்ந்த திரு. கமலநாதன் பா. உ. கூறினர்.

---

## இளைஞர்கள் உண்ணவிரதம்

சனிக்கிழமை (9.6.73) அன்று காலை 7.00 மணிக்கு சித்தாண்டி கந்தசுவாமி கோவிலில் மட்டுநகர் இளைஞர் பேரவை சார்பில் பட்டிருப்பு, மட்டுநகர், கல்குடா ஆகிய தொகுதிகளைச் சேர்ந்த 50 இளைஞர்கள் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் வண்ணை ஆனந்தன் ஆகியோரின் ஓராண்டு சிறைவாழ்வு பூர்த்தியை முன்னிட்டு அரசாங்கத்தின் போக்கைக் கண்டித்து உண்ணவிரதம் இருந்தனர். மதிய பூசையின்போது தந்தை செல்வா, காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன் ஆகியோர் பேரில் அர்ச்சனை போடப்பட்டது.

அன்று பி. ப. 5 மணிக்கு கோவில் தலைவர்கள் சார்பில் திரு. ச. காசுபதி அவர்கள் உண்ணவிரதம் இருந்த இளைஞர்களுக்கு பஞ்சாமிர்தம் கொடுத்து உண்ணவிரதத்தை இனிதுற முடித்து வைத்தார். கோவில் குருக்கள்மார் ஒத்துழைப்பு நல்கினர்.

---

இப்பத்திரிகை [illegible] நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194ஏ. இலக்கத்தில் 1973ம் வருடம் ஜூன் மாதம் 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.




3வது வாரம் லிடோ (யாழ்நகர்)

2வது வாரம் கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை)

ஜெய்சங்கர் லக்ஷ்மி (இருவேடங்களில்) முத்துராமன், சுந்தரராஜன்.
மனோரமா பாலையா எம். ஆர். ஆர். வாசு பேபிராணி

மற்றும் பலர் நடித்த

# ராணி யார் குழந்தை

151வது தினம் கெப்பிட்டல் (கொழும்பு) வெலிங்டன் (யாழ்நகர்)

சிவாஜி கணேசன், வாணிஸ்ரீ நடித்த

## வசந்தமாளிகை (ஈஸ்ட்மென் கலர்)

2வது ஜனத்திரள் மாதம்!

செண்ட்ரல் (கொழும்பு) ராணி (யாழ்நகர்)

தமிழ் நாட்டில் 100 நாட்களுக்குமேல் ஓடியது

முத்துராமன், ஜி. வரலெட்சுமி,

பிரமிளா, ரங்கராவ், ராகவன், ஓ. ஏ. கே. தேவர்,
ரி. ஆர். ராமச்சந்திரன், ஆர். வரலெட்சுமி —நடித்த—



கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

# வாழையடி வாழை

5வது வாரம்

கெபிட்டி (கொழும்பு) தாஜ்மகால் (மாத்தளை) நெல்சன் (திருமலை)

ஜெமினி முத்துராமன்
நிர்மலா தேங்காய் சீனிவாசன்
மனோரமா எம். ஆர். ஆர். வாசு

நடித்த

## சுடரும் சூறாவளியும்

100 நாட்கள் சென்னையில் ஓடியது விரைவில் வருகிறது

செல்லமகாலில்




திரைக்கதை வசனம், டைரக்ஷன்: கோபு

# காசேதான் கடவுளடா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org